Registered as a Newspaper

யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

டர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாதி 27 திங்கட்கிழமை (13-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 301

# அமெரிக்காவின் நடவடிக்கை சமாதானத்துக்கு உதவாது!

## தடை குறித்து புலிகள் அறிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 13

"தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக அறிவித்து, அமெரிக்காவில் அந்த அமைப்பு இயங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பது சமாதானத்துக்கு எந்த விதத்திலும் உதவப்போவதில்லை"

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உட்பட உலக நாடுகளில் உள்ள 30 அமைப்புகளை பயங்கரவாத அமைப்புக்களாக அமெரிக்கா அறிவித்தது அல்லவா?

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இனவாதக் கொள்கை கொண்ட சிங்கள அரசாங்கம் தொடர்ந்து யுத்தத்தை நடத்தவும், அதன் மூலம் தமிழ்மக்களை நசுக்கவும், அமெரிக்க நடவடிக்கை ஊக்குவிப்பதாக அமையும். இந்த நடவடிக்கைக்கு எமது அமைப்பின் அதிர்ச்சியையும் அதிருப்தியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வன்முறைப் போராட்டத்தின் பின்னர் சுதந்திரத்தைப் பெற்ற அமெரிக்கா அன்றில் இருந்து மனித உரிமைக்காக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்களின் 4 சடலங்கள் மீட்பு

பொலன்னறுவை மாவட்டம் கட்டுவன்வில்லுக்குளம் என்னும் இடத்தில் கடந்த முதலாம் திகதி இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட 6 மீனவர்களில் 4 மீனவர்கள் நேற்று சடலமாக மீட்கப்பட்டனர்.

காட்டுப்பகுதியில் இருந்து வெலிகந்த பொலீஸார் சடலங்களை மீட்டனர்.

## 5 லொறிகளும் படையினர் வசம்

வவுனியா, ஒக். 13

வவுனியாவிலிருந்து புதுக்குடியிருப்புக்கு நிவாரணப் பொருள்களுடன் கடந்த 5 ஆம் திகதி சென்ற 5 லொறிகளும் படையினர் வசம் உள்ளன என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

அந்த லொறிகள் குறித்தும் அதில் சென்ற 10 பேர் குறித்தும் தகவல் இல்லை என்று கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்கள் வவுனியா அரச அதிபருக்கு அறிவித்திருந்தனர்.

அந்த லொறிகளும், அதன் சாரதிகளும் படையினர் வசம் இருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

அதே நேரம் — லொறிகளின் கிளீனர்களும் மற்றும் இரு பயணிகளும் நேற்று படையினரால் வவுனியா குட்செட் இடைத்தங்கல் முகாமில் ஒப்படைக்கப்பட்டனர். (இ-3)

## மன்னார் கப்பல் சேவை புதன்கிழமையுடன் நிறுத்தம்!

மன்னார், ஒக். 13

மன்னாருக்கும், காங்கேசன்துறைக்கும் இடையேயான பயணிகள் கப்பல் சேவை நாளை மறுதினம் நடக்கும் சேவையுடன் நிறுத்தப்படும் என்று மன்னார் செயலக அதிகாரி தெரிவித்தார்.

இன்று மன்னாரில் இருந்து 640 பயணிகளுடன் இரு கப்பல்களும் காங்கேசன்துறை நோக்கிச் செல்லும் என்றும் —

மீண்டும் நாளை மறுதினமும் ஒரு சேவை இடம்பெறும் என்றும் —

அத்துடன் சேவை இடைநிறுத்தப்படும் என்றும் — அவர் தெரிவித்தார்.

இன்று இடம்பெறும் சேவையுடன் நிறுத்த ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தது என்றும் —

மேலும் பயணிகள் மன்னாருக்கு வந்துள்ளதால் நாளை மறுதினமும் ஒரு சேவை நடத்தப்படுகிறது என்றும் — அவர் கூறினார்.

(இ-3)

## முருங்கன் பொலீஸ் நிலையம் மீது புலிகள் நேற்றுத் தாக்குதல்!

கொழும்பு, ஒக். 13

மன்னார் மாவட்டம் முருங்கன் பொலீஸ் நிலையம் நேற்று அதிகாலை 1.30 மணிக்கு விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது.

மூன்று மணித்தியாலமாக இடம்பெற்ற இத்தாக்குதலில் மோட்டார்கள், சிறு ஆயுதங்களை புலிகள் பாவித்தனர் எனக் கூறப்பட்டது.

இத்தாக்குதலில் இராணுவ கப்டன் உட்பட 5 இராணுவத்தினரும், 2 பொலீஸாரும் உயிரிழந்தனர். 11 பொலீஸாரும், 12 இராணுவத்தினரும் காயமடைந்தனர்.

அதேசமயம் இத்தாக்குதலை பொலீஸாரும், இராணுவத்தினரும் முறியடித்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அங்கு இடம்பெற்ற சண்டையில் 20 க்கும் அதிகமான விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் —

பல விடுதலைப் புலிகள் காயமடைந்தனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினர் தரப்பில் ஓர் அதிகாரியும் 4 படையினரும் கொல்லப்பட 14 பேர் காயமடைந்தனர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-21-5-3)

## புலிகள் - கடற்படையினர் வடபகுதிக் கடலில் மோதல்

வடபகுதிக் கடலில் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதலில் 6 புலிகள் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகளின் படகு ஒன்று கச்சதீவு நோக்கிச் சென்றுகொண்டிருந்த சமயமே மோதல் மூண்டதாகவும் —

இந்த மோதலின் போது புலிகளின் மற்றொரு படகு தப்பிச் சென்றுவிட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

வெடி மருந்துகளையும், வெடிப்பொருள்களையும் ஏற்றிக்கொண்டு விடுதலைப் புலிகள் இப்படகில் சென்றதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

(இ-5)

## பயணிகள் சேவைக்கு பிரிட்டிஷ் கப்பல்

கொழும்பு, ஒக். 13

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் சேவை நடத்த பிரிட்டிஷ் கப்பல் ஒன்றை வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபை வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு - கிழக்கு இணைப்புக்கு

## வாக்கெடுப்பு நடத்தும் திட்டத்தில் மாற்றமில்லை

கொழும்பு, ஒக். 13

வடக்கு — கிழக்கு இணைந்த அதிகாரப்பரவலாக்கல் அலகை உருவாக்கும் விடயத்துக்கு திட்டமிட்டபடி சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி கிழக்கு மாகாண மக்களின் விருப்பத்தின்படி செயற்படுவது என்றும் —

அதற்காக அங்கு சர்வஜன் வாக்கெடுப்பு நடத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்குவது என்றும் — நேற்று முன்தினம் விசேடமாகக் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

விசேடமாகக் கூடிய அமைச்சரவைக் கூட்டம், அதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

### அமெரிக்கா செல்ல

## தமிழகத்திலுள்ள புலிகளின் ஆதரவாளருக்கும் தடை?

கொழும்பு, ஒக். 13

விடுதலைப்புலிகள் அமைப்பு அமெரிக்காவில் தடை செய்யப்பட்டுள்ளதையடுத்து, தமிழகத்தில் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்பு ஆதரவாளர்களும் அமெரிக்கா செல்ல வீஸா மறுக்கப்படலாம் என்று தமிழகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவரை மேற்கோள் காட்டி இச்செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான தலைவர்களான டாக்டர் ராமதாஸ், வை. கோபாலசாமி, ப. நெடுமாறன் மற்றும் ஜோர்ச் பெர்னாண்டஸ் ஆகியோருக்கும்—

அண்மையில் தமிழகத்தில் நடந்த ஈழ ஆதரவு மாநாட்டில் கலந்து கொண்ட நீதிபதிகள், சட்டத்தரணிகள், பத்திரிகையாளர்கள். எழுத்தாளர்கள் ஆகியோருக்கும் அமெரிக்கா செல்ல வீஸா வழங்கப்படமாட்டாது என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-21-3)

## ஹிஸ்புல்லா கலந்து கொண்ட கூட்டத்தில் 3 கிலோ குண்டு மீட்பு

### படையினர் மீட்டு செயல் இழக்க வைத்தனர்

மட்டக்களப்பு, ஒக். 13

மட்டக்களப்பில் தபால் தொலைத் தொடர்பு பிரதி அமைச்சர் எம். எல். எம். ஹிஸ்புல்லா கலந்துகொண்ட கூட்டத்தில் மூன்று கிலோ குண்டு கண்டு பிடிக்கப்பட்டு செயல் இழக்கச் செய்யப்பட்டது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

மட்டக்களப்பு மஞ்சள் தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரியில் கம்பியூட்டர் பிரிவு திறப்பு விழா நேற்று நண்பகல் இடம் பெற்றது.

பிரதி அமைச்சர் அதில் கலந்து கொண்டு உரையாற்றிக்கொண்டிருந்த சமயம், அந்த வைபவம் நடந்த வளவுக்குள் சந்தேகத்துக்குரிய வகையில் சிமெந்துபைஒன்றை காவலில் இருந்த பொலீஸார் கண்டனர்.

உடனடியாக இராணுவ குண்டு செயலிழக்கும் பிரிவுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

அங்கு விரைந்த இராணுவ குண்டு செயலிழக்கும் பிரிவினர் [illegible] னர் அக்குண்டை வெடிக்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி
## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில்
# மஹோற்சவம் 1997

சிறப்பு உற்சவங்கள்

**13-10-97** திங்கட்கிழமை மாலை 8 மணிக்கு சப்பற உற்சவம்

**14-10-97** செவ்வாய் காலை 10 மணிக்கு ரதோற்சவம் ஆசியுரை: நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

**15-10-97** புதன்கிழமை மாலை 4 மணிக்கு சமுத்திர தீர்த்த உற்சவம்

**16-10-97** காலை 10 மணிக்கு கேணித்தீர்த்தம்

★ இச்சிறப்பு உற்சவ நாள்களில் வடமராட்சிப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் நீக்குவதற்கு அனுமதி பெற்றுள்ளோம். அத்துடன் இந்நாளகளில் கோயிலிலும் மடங்களிலும் பக்தர்கள் தங்குவதற்கும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

★ இ. போ. ச. தனியார் பஸ் சேவைகளுக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட பக்தர்கள் இத்திருவிழாக்களில் பங்குகொண்டு மாயவன் அருள் பெற்றேகுமாறு வேண்டுகிறோம்.

கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இம் மஹோற்சவ நாள்களில் நாதஸ்வர கானகலாநிதி பத்மநாதன் தலைமையில் நாதஸ்வர வித்துவான் ரஜீவன் பிரபல தவில் வித்துவான்கள் முருகையா, ராமதாஸ் ஆகியோரின் இசைநிகழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன.

**தர்மகர்த்தா சபை**

துன்னாலை வடக்கு, புலோலி. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில்
(50469)

உ
# இந்து மதகுருமார் ஒன்றியம்
## யாழ்ப்பாணம்

இந்து குருமார்களது அடையாள அட்டைக்கான புகைப்படங்கள் பின்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படுமென அறியத்தருகின்றோம்.

15-10-97 புதன்கிழமை
கதிரேசன் கோயில், யாழ்ப்பாணம்.
நேரம் - 8.00 மணி தொடக்கம் 2.00 மணி வரை.

16-10-97 வியாழக்கிழமை
மாலுசந்தி பிள்ளையார் கோயில், பருத்தித்துறை.
நேரம் - 8.00 மணி தொடக்கம் 2.00 மணி வரை.

18-10-97 சனிக்கிழமை
சிவன் கோயில், சாவகச்சேரி.
நேரம் - 8.00 மணி தொடக்கம் 2.00 மணி வரை.

19-10-97 ஞாயிற்றுக்கிழமை
தர்மஸாஸ்தா குருபீடம், இணுவில்.
நேரம் - 8.00 மணி தொடக்கம் 2.00 மணி வரை.

20-10-97 திங்கட்கிழமை
இலுப்பத்தாள் முருகமூர்த்தி கோயில், சங்கானை.
நேரம் - 8.00 மணி தொடக்கம் 1.00 மணி வரை.

மேலும் அடையாள அட்டை உறை செய்வதற்கு (கிளீன்கட்) ரூபா 50/- கொண்டுவரவும்.

நன்றி.

பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகர சர்மா
செயலாளர்.
(50474)

# விற்பனைக்கு

1. **புதிய வீடியோ கமரா** (PANASONIC மொடல் 9000)
2. **புதிய வீடியோ கசற், டெக்** (PANASONIC)

**வீடியோ விமல்**
**9/1, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.** (C/1759)

# கண்ணீர்க் காணிக்கை

''கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் ...... பாக்கியவான்கள்''
(வெளி; 14:13)

பேராயர் அமரர்
## கலாநிதி டி. ஜே. அம்பலவாணர் அவர்கள்

முன்னாள் பேராயர் அமரர் கலாநிதி டி. ஜே. அம்பலவாணரின் பிரிவால் துயருறும் தென்னிந்தியத் திருச்சபை யாழ். ஆதீனத்தின் பேராயர் அருட்பெரும் திரு. கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களுக்கும், ஏனைய குருமாருக்கும், ஊழியக்காரருக்கும் மற்றும் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது இரங்கலையும் கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

சபை ஊழியரும், திருச்சபை மக்களும்,
**தென்னிந்திய திருச்சபை,**
நெடுந்தீவு. (50475)

## மெய்வன்மை சட்டவிதிகள் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 13

மெய்வன்மைச் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற்றோரைத் தெரிவு செய்வதற்கான பரீட்சைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9 மணி முதல் யாழ்ப்பாணம் உட்பட 3 இடங்களில் நடைபெறும் என ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்க அலுவலர் குழுத் தலைவர் பி. எச். டி. வைத்தியதிலக நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் இப்பரீட்சைக்கான பரீட்சை மண்டபம் ஒன்று அமைய உள்ளது. இங்கு 180 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். (உ-3)

## யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் அஞ்சலிக் கூட்டம்

காலஞ்சென்ற தென்னிந்திய திருச்சபை, யாழ். அத்தியட்சாதீனத்தின் முன்னாள் பேராயர் அதிவண. டி.ஜே. அம்பலவாணருக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு மானிப்பாயில் உள்ள பேராயர் இல்லத்தில் நடைபெற உள்ளது.

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஒன்றியம் இந்த அஞ்சலிக் கூட்டத்தை நடத்துகிறது.

தற்பொழுது மானிப்பாய், பேராயர் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள பேராயரின் திருவுடல் நாளைமறுதினம் புதன் காலை 'இறுதி ஆராதனைக்காக வட்டுக்கோட்டைக்கு எடுத்துச் செல்லப்படும். பின்னர் உடுவிலில் நல்லடக்க ஆராதனை நடைபெறும். (ஐ)

## புத்தகங்கள் இரவல் கொடுக்கும் பகுதி இயங்கும்

குருநகர் றெக்கிளமேசன் சன சமூக நிலையத்தின் புத்தகங்கள் இரவல் கொடுக்கும் பகுதி விரைவில் செயற்படவுள்ளது.

'1995 வரை சிறப்பாக இயங்கி வந்த இச் சனசமூக நிலையத்தின் புத்தகங்கள் இரவல் கொடுக்கும் பகுதியில் இருந்த புத்தகங்கள் யாவும் இடப்பெயர்வின் போது தொலைந்து போயுள்ளன. எனவே புதிதாகப் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு இரவல் கொடுக்கும் பகுதி ஆரம்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-51)

**ஈசன்**
**கல்வி நிலையம்,**
கோண்டாவில்.
**தாவரவியல்**
**A/L 98, 99**
**தாவர**
**உடற்றொழிலியல்**
தனித்துவ ஆசிரியர்
**ஆரம்பம்:-**
**14 - 10 - 97**
4.00 P.M.
(50471)

**EESAN**
**INSTITUTE**
**KONDAVIL**
**ACCOUNTING**
**Mr. Balavasan**
**COSTING**
ஆரம்பம்:
(50495)

# மரண அறிவித்தல்

## திருமதி ஜெகதீஸ்வரி நடராஜா B. Sc.

(ஓய்வு பெற்ற ஆசிரியை, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்)

திருமதி ஜெகதீஸ்வரி நடராசா 10-10-97 அன்று மாலை இறைவனடி எய்தினார்.

அன்னார் நடராஜா (நிறைவேற்று பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும். காலஞ் சென்ற பண்டாரம் மதியாபரணம், திருமதி பாக்கியம் மதியாபரணம் அவர்களின் சிரேஷ்ட புத்திரியும், பாலசுப்பிரமணியம் (Manager, Chinese Park View Lodge, Colombo-2) காலஞ்சென்ற சிவயோகேஸ்வரி, கருணேஸ்வரி (லண்டன், ஓய்வு பெற்ற மருந்தாளர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரிசாதேவி (கொழும்பு), சிவதாசன் (இலங்கை வங்கி, சுன்னாகம், தற்பொழுது கொழும்பு) விவேகானந்தன் (லண்டன்- ஓய்வு பெற்ற கூட்டுறவு பரிசோதகர், நல்லூர்) பாலசுப்பிரமணியம் (வடபிராந்திய போக்குவரத்து சபை, கோண்டாவில்), இந்திரலிங்கம் (வடபிராந்திய போக்குவரத்து சபை, கோண்டாவில்), இராசலட்சுமி, தியாகலிங்கம் (கனடா), கணேசமூர்த்தி (வர்த்தகம்-கொக்குவில்), திலகவதி, சொர்ணகாந்தி ஆகியோரின் அன்புமைத்துனியும், முகுந்தன், ராஜி, கோகிலா, அரவிந்தன், மயூரன், காவேரி, கஜனி, சிந்துயன். சியாந்தன் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உரும்பிராய் கிழக்கு, சேச் லேனில் உள்ள அன்னாரது இல்லத்தில் 12-10-97 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் இளங்காடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆர். நடராசா
(கணவன்)

சேச்லேன்,
உரும்பிராய்.

● பாலசுப்பிரமணியம் (Manager Chinese Park View Lodge, Colombo-2) என்பவரை நேற்றைய 12-10-97 பத்திரிகையில் காலஞ் சென்ற பாலசுப்பிரமணியம் என்று தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளதையிட்டு மனம் வருந்துகிறோம். (50467)

# நன்றி நவிலல்

## திருமதி ஜெகதீஸ்வரி நடராஜா

எனது அன்பு மனைவி ஜெகதீஸ்வரி அவர்களின் இறுதிக் கிரியைகளில் நேரடியாகக் கலந்து கொண்டு அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள் சாத்தியும், மலர்மாலைகள் அணிவித்தும், துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் நேரடியாக வரமுடியாதவிடத்து அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், யாழ். போதனா வைத்திய சாலை வைத்தியர்கள், தாதிமார், ஊழியர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும், வயாவிளான் ம. ம. வி. ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இ. நடராஜா
(கணவன்)

சேச்லேன்,
உரும்பிராய். (50500)

## நல்லூர் லயன்ஸ் கழகத்தினரின்
# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்
**லயன் பி. கே. பி. பாலசங்கர்**
அவர்களின்
அருமைத் தந்தையார்



## பெரியதம்பி கந்தையா பாலசிங்கம்

(முதன்மை ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், கல்வி அமைச்சின் முன்னாள் விஞ்ஞான பாட நூல் எழுத்தாளர்- கொழும்பு)

அவர்களின் மறைவினால் வாடும் குடும்பத்தாரின் துயரத்தில் பங்கு கொள்ளும் எமது கழகம் அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றது.

**நல்லூர் லயன்ஸ் கழகம்**

சி/1761

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுப்பிட்டி கூ. சங்க லொறி கொழும்பில் தவம் கிடப்பு

## எடுத்துவர கப்பல் வசதி இல்லை

உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கொள்வனவு செய்த புதிய லொறி, கப்பல் சேவை சீரின்மையால் கடந்த பல மாத காலமாக கொழும்பில் தவம் கிடக்கின்றது.

மேற்படி சங்கத்தின் பாவனையிலுள்ள ஒரு லொறி மட்டுமே தற்பொழுது பழுதுபட்ட நிலையிலும் சேவை மேற் கொண்டு வருகின்றது.

லொறிப் பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு 14 லட்சம் ரூபா பெறுமதியான இப் புதிய லொறி கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டது. அதை இங்கு கொண்டு வர அனுமதி கிடைத்துள்ள போதும் கப்பல் சேவை சீரின்மையால் அதனை இங்கு எடுத்துவர முடியாதுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-109)

# தொலைக்கல்வி முறையில் தொடர்கல்விப் பாடநெறி

## கல்வி நிறுவகம் ஆரம்பித்துள்ளது

அச்சுவேலி ஓக். 13

ஆசிரியர் தொடர்கல்வி பாட நெறியில் சேர்ந்து கொள்வதற்கு விண்ணப்பிக்கத் தவறிய யாழ். மாவட்ட ஆசிரியர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஆசிரியர்கள் உரிய காலத்தில் விண்ணப்பிக்க முடியாமற் போனதற்கான காரணத்தை ஏற்றுக் கொண்ட தேசியகல்வி நிறுவகம் மீண்டும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

பூர்த்தி செய்த விண்ணப்பங்களை உடனடியாக ''பணிப்பாளர், தொலைக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதுடன் அதன் பிரதியை யாழ். இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஐ-11)

# ஆலயத்துக்கு செல்லும் வீதி செப்பனிடப்பட்டது

நெல்லியடி, ஓக். 13

வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவத்துக்குச் செல்லும் அடியார்களின் நலன் கருதி, மந்திகை — உபய கதிர்காமம் வீதி, பருத்தித்துறை வீதி, அபிவிருத்தித் திணைக்களத்தால் அண்மையில் தார் ஊற்றிச் செப்பனிடப்பட்டுள்ளது. (ஐ-109)

# நாகர்கோயில் நாகதம்பிரான் உற்சவம் ஆரம்பம்

குடத்தனை, ஓக். 13

நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளியன்று ஆரம்பமானது. விசேட உற்சவமான கப்பல் திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும். மற்றொரு விசேட உற்சவமான சமுத்திரத்தீர்த்தம் எதிர்வரும் 19 ஆம் திகதி இடம்பெறும்.

தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் உற்சவங்களில் கலந்து கொள்கின்றனர். தினமும் மாலை 5-30 மணி முதல் 6-30 மணி வரை தெய்வீகச் சொற்பொழிவுகளும் இடம் பெற்று வருகின்றன. (ஐ-ரி)

# தமிழ்க் கலைகளின் செழுமையை வெளிக்காட்டும் சீரிய படைப்பு

## பாராட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஓக். 13

ஈழத் தமிழ்க் கலைகளின் செழுமையினை வெளிக்காட்டும் சீரிய படைப்பு கலாநிதி காரை. எஸ். சுந்தரம்பிள்ளையின் சாகித்திய விருது பெற்ற நூல் ஆகும்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஜே. ஜே. அற்புதராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கலாசாலை முதல்வர் காரை.எஸ். சுந்தரம்பிள்ளை சாகித்தியவிருது பெற்றமையைக் கௌரவிக்கும் வகையில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கடந்த வாரம் பாராட்டுவிழா ஒன்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே விரிவுரையாளர் அற்புதராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும் போது இந்தவகை ஆய்வு நூல்கள் தொடர்ந்து எழுதப்பட வேண்டும். அத்தகைய நூல்கள் எமது கலாசாரத்தின் சீரிய பண்புகளை அறிந்து கொள்ள உதவும். 'நாடகமும் அரங்கியலும்' போன்ற புதிய கற்கைத் துறைகளை வளம்படுத்த இந்த ஆய்வு பயன்படும் — என்றார்.

மற்றும் விரிவுரையாளர்களும், ஆசிரிய மாணவர்களும் இதில் கலந்து கொண்டு பாராட்டுரைகள் வழங்கினர்.

கலாநிதி காரை. எஸ். சுந்தரம்பிள்ளை பதிலளித்துப் பேசுகையில், தனக்கு நாடகத்துறையில் சிறு பிராயத்தில் இருந்தே நாட்டமிருந்ததென்றும், அந்த ஈடுபாடே இந்த ஆய்வினை மேற்கொள்ளக் காரணமாக இருந்ததென்றும் கூறினார்.

(இ-5)

# விசேட அ. அட்டை விநியோகம்

வலிகாமம் தெற்கு, ஓக். 13

சுந்தரோடை கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை செவ்வாய்க் கிழமை காலை உடுவில் சிவில் நிர்வாகப்பிரிவு அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என கிராமசேவையாளர் அறிவித்துள்ளார்.

(ஐ-152)

# தமிழர் சமுதாயத்தைப் புண்படுத்தும் சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கை

இலங்கையின் 50ஆவது சுதந்திரப் பொன் விழாக் கொண்டாட்டங்களுக்கான ஆரவாரங்களுக்கு மத்தியில் சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவந்துள்ளது.

பிரித்தானிய காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட நாளிலிருந்து இங்கு நாடு இன முரண்பாட்டு சூழலில் சீரழிந்துள்ளது.

பல லட்சக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாக திசையெங்கும் தறிகெட்டு ஓடிக்கொண்டிருக்கின்றனர். பசி, பட்டினி, நோய் ஆகியவற்றுடன் யுத்தம் எப்போது தமது உயிரைக்காவு கொள்ளுமோ என்ற பீதியுடன் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நாட்டில் இனப்பிரச்சினை தீர்வுக்காக எடுக்கப்பட்ட இதய சுத்தியுடனான முயற்சிகளெல்லாம் பேரினவாத வெள்ளத்தில் அள்ளுண்டு போனது இந்த நாட்டின் அவமானகரமான வரலாற்றால் பதியப்பட்டுள்ளது.

1955 இல் பண்டா—செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது அந்த ஒப்பந்தத்திற்கெதிராககடந்த 17 வருட இரத்தம் தோய்ந்த கறைபடிந்த அத்தியாயத்தின் கதாநாயகன் ஜே. ஆர். ஜெயவர்த்தனா நாடு பிரித்துக் கொடுக்கப் போகிறார்கள் என்று பேரினவாதக் கோஷம் எழுப்பி விகாரமகாதேவி பூங்காவிலிருந்து கண்டிக்கு யாத்திரை நடத்தினார்.

அதே போல் டட்லி—செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது எங்களுக்கு தோசையும் மசாலா வடையும் வேண்டாம் என்று ஊர்வலம் நடத்தப்பட்டது.

இந்திய — இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதும் இதே தமிழர் விரோத ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

1994 ஆம் ஆண்டிலிருந்து இந்த நாட்டின் சிங்கள. தமிழ், முஸ்லிம் மக்கள் எதனை விரும்புகிறார்கள் என்பதனை தேர்தல் வாக்களிப்புக்களின் போது தெரிவித்துள்ளார்கள்.

சமரவீரவின் துணிச்சல்

நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட்ட போது மக்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வு சமாதானத்திற்கான தமது வேட்கையை வெளியிட்டிருந்தார்கள். அதன் அடிப்படையில் சிங்கள ஆணைக்குழு அறிக்கையை குப்பைக் கூடைக்குள் போட வேண்டுமென்று அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் குறிப்பிட்டது சரியானதே. பேரினவாதத்திற்கு எதிரான அவரது இதய சுத்தியுடனான துணிச்சல் மிக்க சாட்டையடியை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. பௌத்த மதபீடங்களுடன் மோதினால் அவர்களின் அரசியல் எதிர்காலம் இருண்டு விடுமென்று சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில் இருந்த பயத்தை அலட்சியம் செய்து மங்கள சமரவீர அவர்கள் விடுத்த அறிக்கையை இலங்கையின் அரசியல் பாரம்பரியத்தில் புதிய பாதை ஒன்றைத் திறந்துள்ளது.

இந்த நாட்டில் நடந்த பெரிய அரசியல் துரதிர்ஷ்டம் என்னவென்றால் பௌத்த மதத்தின் உயர்பீடாதிபதிகள் அரசியல் திசை வழியை தீர்மானிக்கும் சக்திகளாக மாறியது தான்.

அவர்களிடம் ஆசி பெறும் பாரம்பரியமும் பதவிக்கு வரும் அரசு தலதா மாளிகையின் எண்கோண மண்டபத்தில் நின்று உரையாற்றுவதும் தான், இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த சம்பிரதாயமாக இருந்து வந்தது, மதகுருக்கள் மதக் கடமையை, ஆன்மீகக் கடமையை செய்தால் அது இந்த நாட்டிற்கு செய்யும் மாபெரும் சேவையாக இருக்கும். அதை விடுத்து தமக்குச் சம்பந்தமில்லாத விடயத்தில் மூக்கை நுழைக்கக் கூடாது.

இந்தச் சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கையை குப்பைத் தொட்டியில் போட வேண்டும் என்று சொன்னதில் என்ன பிழை இருக்கின்றது? இலங்கை சுதந்திரம் பெற்ற இந்த 50 வருடங்களில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் அநியாயங்களை மறைத்து சிங்களவர்களுக்குத்தான் பாரபட்சம் காட்டப்பட்டது என்று சொல்வது எவ்வளவு வேடிக்கையானது.

சிறுபான்மையினரின் பிரச்சினைகள்

சிங்களவர்களுக்கு 1987 – 1990 வரையிலான காலப் பகுதியில் இழைக்கப்பட்ட அநியாயங்களுக்காகஇவர்கள் குரல் கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும், எத்தனை பேர் ரயர் மாலை போட்டு எரிக்கப்பட்டார்கள்? எத்தனை பாடசாலை மாணவர்கள் புதைகுழிக்கு அனுப்பப்பட்டார்கள்? அப்போதெல்லாம் சிங்களவர்களின் நலன்களைப் பாதுகாப்பதாகக் கூறிக் கொள்ளும் இவர்கள் எங்கே போனார்கள்?

அதற்காக சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் பொதுவான சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் இல்லையென்றில்லை; இருக்கின்றன. ஆனால் இனரீதியான பிரச்சினைகள் பாரபட்சங்கள் இந்த நாட்டின் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருக்கக் கூடிய மக்களுக்கே இருக்கின்றன. இதனை எந்தப் பகுத்தறிவுள்ள மனிதரும் ஏற்றுக் கொள்வார்கள்.

மங்கள சமரவீர சிங்களக் கமிஷன் அறிக்கையை அவமதித்து விட்டார் என்று ''தாம் தோம்'' என்று குதிப்பவர்கள் 1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாண நூல் நிலையம் எரிக்கப்பட்ட போது தம்மபதமும் சேர்த்துக் கொளுத்தப் பட்டதை அறிவார்களா? கபில வஸ்துவில் பிறந்த போதி மாதவன் எதனைப் போதித்தான்? இந்த அவலட்சணங்களை அவன் நேரடியாகப் பார்த்திருந்தால் அந்த போதி மரத்திலேயே தூக்குக் கயிற்றை மாட்டியிருப்பான்.

புத்தர் அன்பு, கருணை, சமாதானம், நல்லுறவை அல்லவா போதித்தார். இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால் வெறிகொள்ளச் சொல்லவில்லையே அப்படி வெறி கொள்பவர்கள் உண்மையான மத, இனப் பற்றாளர்களாக இருக்க முடியாது, கௌதம புத்தரின் கோட்பாடுகளில் ஈடுபாடு கொண்ட அம்பேத்கர் தான் இந்திய அரசியல் சாசனத்தை வரைந்தார். அதில் மதச் சார்பற்ற இந்தியா என்றே குறிப்பிடப்படுகின்றது.

ஆதிக்கவாத பிக்குகள் இலங்கையில் எல்லாபௌத்த பிக்குக்களும் கருணையற்றவர்களல்லர். புத்தனின் வழியைப் பின்பற்றும் அடிமட்டத்திலுள்ள சாதாரண சாதுக்களே இந்த நாட்டின் பெருவழியாக உள்ளார்கள்.

**மனுவேல் மங்கள நேசன்**
தலைவர், வெண்தாமரை இயக்கம், யாழ். மாவட்டம்

அது ஒரு நம்பிக்கை தரும் விடயமுமாகும். கிராமங்களில் மக்களுடன் தொடர்பு கொண்டவர்கள் இவர்களே இவர்கள் சமாதானத்தை, கருணையை, அன்பை நேசிக்கின்றார்கள். ஆதிக்கவாத பிக்குகளின் போக்குக்கு எதிராக மேற்படி தரப்பினர் தமது கருத்தை வெளிக்கொணர வேண்டும்.

தமது நடைமுறைகள் மூலம் உண்மையான பௌத்தராக இருக்கும் மங்கள சமரவீரவை மதப் புறக்கணிப்புக்கு உட்படுத்த இந்த ஆதிக்க வாத சக்திகளுக்கு எந்த அருகதையுமில்லை. தமது சொந்த இருப்பு, சுகபோகம் நவீன கருத்துக்களால் அடிபட்டுப் போகும் என்ற பீதியே இவர்களைப் பிடித்து ஆட்டுகின்றது.

இந்தச் சிங்கள ஆணைக்குழு, அரசின் தீர்வுப் பொதி தமிழர்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்கும் பொறி என குற்றம் சாட்டுகிறது. காணி பொலீஸ் அதிகாரங்களை வழங்குவதாகவும் பிராந்தியங்களின் ஒன்றியம் நாட்டைப் பிரிப்பதற்கான முன் நடவடிக்கை எனவும் குற்றம் சாட்டுகிறார்கள். கல்வி, வேலைவாய்ப்,புகாணி மற்றும் பல்வேறு துறைகளில் சிங்களவர்களுக்கே அநீதி இழைக்கப்பட்டதாக கூறுகிறார்கள்.

வேடிக்கை என்னவென்றால், இந்த வெட்கம் கெட்ட ஆணைக்குழுவின் தலைவர்களாக முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர்களே இருந்தார்கள் — பல்கலைக்கழக உபவேந்தர், விரிவுரையாளர்கள், பௌத்தபிக்குகள் இந்த ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்துள்ளார்கள்.

தமிழரை புண்படுத்துதல்

இன முரண்பாட்டு யுத்தத்தில் இன்று பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புக்களையும், பலலட்சக்கணக்கான அகதி மக்களையும் அழிவுகளையும் கண்டுள்ள தமிழர் சமுதாயத்தை, சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கை புண்படுத்துவதாகவே உள்ளது.

அவர்களுக்குப் பிரச்சினைகள் எதுவும் கிடையாது. விடுதலைப் புலிகளை யுத்தத்தில் தோற்கடித்துவிட்டால் போதும் என்றகருத்தை நியாய உணர்வுள்ள எந்த மனிதனும் ஏற்றுக்கொள்ளமாட்டான். இவர்களுடைய இத்தகைய பொறுப்பற்ற நடவடிக்கைகள் சில வேளை இன நெருக்கடியை மேலும் சிக்கலாக்கிவிடலாம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு, இலங்கையின் அரசியல் சமூக பொருளாதார வாழ்வை ஜனநாயகப்படுத்துதல், மனித உரிமைகளைப் பேணுதல் என்பன போன்ற விடயங்கள் அரசியல் அரங்கில் அக்கறைக்குரியனவாக மாறியிருக்கும் வேளையில் இத்தகைய எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் போக்குகளுக்கெதிராக சகல சமூக ஜனநாயக சக்திகளும் அணிதிரள வேண்டும்.

அது பேரின வாதத்திற்கெதிராகவும் மத மிரட்டல்களுக்கெதிராகவும் —

நாட்டில் இனங்களுக்கிடையே உறவுகளைப் பலப்படுத்துவதாகவும் —

இனங்களின் சுயகௌரவம் சுயமரியாதையை உறுதிப்படுத்துவதாகவும் —

சமாதானத்தை நிலைநாட்டுவதாகவும் — அமைய வேண்டும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒஸ்ரின்நோமல் 24 சிறி லொறி எஞ்சின் பாவித்தது விற்பனைக்குண்டு. தொடர்பு;- தி. இராசரத்தினம், 'விஜிதா அரிசி ஆலை' தாவடி தெற்கு, கொக்குவில். (50451)

ஊர்காவற்றுறை கரம்பன் கிழக்கில் அமைந்துள்ள எனது நாட்சார வீட்டின் ஓடு, மரம், தீராந்தி, கதவுநிலை, யன்னல், சீற் என்பன மொத்தமாக விற்பனைக்குண்டு. யாழ். கொண்டுவர அனுமதியுண்டு. தொடர்பு: சு. கதிரித்தம்பி, 16/5, சீனியர்லேன், வண்ணார்பண்ணை. [50456]

கடைச்சல் இயந்திரம் (LATHE MACHINE CHINA) இரண்டு ஒன்று 6 அடி மற்றயது 5 அடி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; 136, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [50488]

### உடன் விற்பனைக்கு

பிறிமா பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். அழகிய கலர் வளர்ப்பு (கொழும்பு) மீன்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந.மனோகரன் ''மல்லிகாபதி'' மானிப்பாய். [50486]

பிறிமா சேவல் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. 13-10-97 பிறிமா பேட்டுக் குஞ்சுகள் வர இருப்பதால் முற்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: திருமகள் பண்ணைக்களஞ்சியம், (சிவன் கோயிலடி) 418, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். [50427]

### தவறிவிட்டது

பெருமாள கோயில் வீதியில் ஒரு பெண்பிள்ளையின் கைக்கடிகாரம்தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பெருமாள் கோயில் நிர்வாகத்திடம் தயவு செய்து ஒப்படைக்கவும். [50463]

யோகராசா பவானி என்பவரது விசேட அடையாள அட்டை 10-10-97 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அப்புக்குட்டி சுப்பிரமணியம், ஒஸ்மானியா கல்லூரி வீதி, லவ்வை ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [50497]

### திருமண சேவை

சகல மதம் உள்நாடு, வெளி நாடு உத்தியோகம், தொழில்சார் மண மக்கள் தேர்வுக்கும், விரைவான திருமணங்களுக்கும் நம்பகமான சேவையைவழங்குகின்றோம். சேவை நம்பகம், விவாக சேவை, வைமன் வீதி, நல்லூர். [50493]

### நாடகம் எழுதுவது

எப்படி? என்பதை விளக்கும் முதலாவது தமிழ் நூல். எல்லா மாணவர்களுக்கும் பயன்படக் கூடியது. ஒரு நாடகமும் 22 கட்டுரைகளும். 275 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதியது. 50/- [50454]

### SPOKEN ENGLISH

சுலபமாக ஆங்கிலம் பயில புதிய பிரிவு ஆரம்பம். ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும் அனுமதி. ஆசிரியர்: ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, (M L.S. LONDON) 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [50466]

## வீதி திருத்தம்

பலவருட காலமாக சேதமடைந்திருந்த துன்னாலை பிட்டிது மயானத்துக்குச் செல்லும் வீதி, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையால் வெள்ளத்தடுப்பு அணை போடப்பட்டு செப்பனிடப்பட்டிருக்கிறது.

இதேவேளை இப்பிரதேச சபைக்குட்பட்ட கணுவில் வீதி, மகாத்மா வீதி, மணியகாரன் தோட்டம் பாடசாலை வீதி போன்றவைகளையும் செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-109)

## தூண்டி

( மாத இதழ் )

வெளிவந்துவிட்டது!

கதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள் எனப் பல ஆக்கங்களை உள்ளடக்கிய இதழ்

குறிப்பு:-

தென்மராட்சிக்கு விற்பனை முகவர் தேவை

தொடர்பு:

**தூண்டி,**
கேணியடி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

[50461]

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நற்செய்தி!

**ஆடை நீக்கிய சுத்தமான பசுப்பால்**
நுகர்வோருக்கு வழங்குவதற்கு எமது சங்கம் முன்வந்துள்ளது

ஒரு லீற்றர் ரூபா **16** ]
ஒரு போத்தல் ரூபா **12** ] மட்டுமே

தேவையானவர்கள் முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும். தொடர்ந்து 10 லீற்றருக்கு மேலாக கொள்வனவு செய்பவர்கட்கு விசேட கழிவு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;-

**பொது முகாமையாளர்,**
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

[சி/1744]

# உடுப்பிட்டி மீன் சந்தை கட்டட வேலை பூர்த்தி


உடுப்பிட்டிப் பகுதியில் புதிய மீன் சந்தைக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் கீழ் இயங்கவுள்ள இப் புதிய மீன் சந்தைக் கட்டடம் இவ் வருட இறுதிக்குள் திறந்து வைக்கப்படவுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வழங்கிய 4 லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதியில் இந்த மீன் சந்தை கட்டப்பட்டது. (ஐ-109)

# நினைவுப் பிரார்த்தனை அழைப்பு

மருதனார் மடம் பல்லப்ப வயிரவர் பாதம் போற்றி



## அமரர் கந்தையா சுப்பிரமணியம்

(இளைப்பாறிய பிரதம லிகிதர் - உடுவில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், பல்லப்ப வயிரவர் ஆலய பரிபாலகர்)

புவியில்: **12 - 10 - 1918**
விண்ணில்: **11 - 09 - 1997**


எங்கள் வாழ்வுக்கு வழிகாட்டிய எம் இல்லத் தலைமகனின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்: இன்று (13-10-97) திங்கள் முற்பகல் 10-30 மணி

திருமதி அ. சுப்பிரமணியம், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

சேர். பொன். இராமநாதன் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (50485)

# நினைவஞ்சலி





**செபமாலை ஞானப்பிரகாசம்** **திருமதி ஞானம்மா ஞானப்பிரகாசம்**

**திதி: 13 - 10 - 1997 திங்கள்**

'' உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும் ''

திரு. திருமதி செல்லப்பா, கொழும்பு,
திரு. திருமதி ஜெயரத்தினம், பிள்ளைகள், இணுவில்,
திரு. திருமதி பரஞ்சோதி, மகள், கனடா,
திரு. திருமதி ஞானச்சந்திரன், பிள்ளைகள், வவுனியா,
திரு. திருமதி தேவச்சந்திரன் இணுவில்,
திரு. திருமதி லிங்கநாதன், பிள்ளைகள் (வண்ணச்சோலை),
திரு. திருமதி மகேந்திரலிங்கம், கொழும்பு.

இணுவில் மேற்கு,
சுன்னாகம். (50440)

உ

'எம்கடன் பணி செய்தல்'

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் கௌரவ ஆலோசகர்

## அமரர் கந்தையா சுப்பிரமணியம்

அவர்களுக்கு

# கவிதாஞ்சலி

பனையென நெடுத்தமெய்யும் பனிமொழி
தொடுத்தவாயும்
சுனையெனப் பக்தியேறிச் செறிவுறும் நல்லநெஞ்சும்
தினையினைத் தேடுகின்ற திருவுளான் கொண்டபேரும்
அனையனே அண்ணலேயெம் அறிவுரை ஆற்றுவோயே

மாநிலம் மீதுகொண்ட முழுமையில் வாழ்விலந்தக்
காணிலந் தேடுநாளைக் கண்டவர் யாருளாரே
பூநிலம் போயடைந்த புண்ணியம் பெற்றநல்லீர்
ஏனிலம் உம்மையையா எம்முளே உறைகின்றீரே.

பந்தியில் முந்துகின்ற பண்புகள் உள்ளபோதில்
சிந்தையில் சிவனின்சேயைச் சீரிதாய்க் கொண்டுநீரும்
சந்தியில் உள்ளகோயில் சமைத்தநற் சிற்பியானீர்
நிந்தையில் லாதவண்ணம் நடத்திய வண்மை
கண்டோம்.

எங்களின் இந்துமன்றம் ஏற்றமா யாகவெண்ணித்
திங்களின் குளுமையோடு தேன்மொழி கூறிநின்று
கங்கைவாழ் சடையுளானின் கழலினை நாடிச்சென்று
தங்கிய தங்கமேயும் தனிவழி போற்றுகின்றோம்.

**- உடுவில் இந்து இளைஞர் மன்றம்.**

(50484)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# யாழ்ப்பாணப் பொதுமக்களில் 27 வீதத்தினர் உள வடுக்களினால் பாதிப்புற்றுள்ளனர்!

இவ்வாரத்தில் உள நல நிலையைப் பற்றி சமூகத்தின் எல்லாமட்டத்தினரும் சிந்திப்பது பொருத்தமானதும் அவசியமானதுமாகும்.

நாம் உடல் ஆரோக்கிய நிலையைப் பற்றி விழிப்புணர்வு கொண்டிருக்கும் அளவைவிட உள ஆரோக்கிய நிலையைப் பற்றிக் கொண்டிருக்கும் விழிப்புணர்வு குறைவாகவே உள்ளது. பல்நோவோ, வயிற்று வலியோ எமது உணர்வைத் தூண்டி வலியைக் குறைப்பதற்கு எம்மை எதையாவது செய்யும்படி தூண்டுகின்றது. ஆனால் சில சாதாரண உடல் வலிகள் கூட உள நலத்திலுள்ள குறைபாடுகளினால் உருவாக்கப்படுகின்றன வென்று நாம் உணர்ந்துகொள்ளவதில்லை.

உளவியல் குழப்பங்களின் வேறு சில குணங்குறிகளாக நித்திரை கொள்ள முடியாமை, பசியின்மை, குடும்பத்தினருடனும் ஏனையோருடனும் உறவுப்பிரச்சனைகள், வேலை செய்யும் திறமையில் குறைபாடு, மதுபானத்தை அதிகமாக உட்கொள்ளல் போன்றவை அடங்கும். சிறிய அளவில் சிந்தித்தாலே எம்மில் பலர் சில சிறிய உளக் குழப்பங்களையாவது கொண்டிருப்பது புரியவரும்.

பொது மக்களில் 10—20 வீதத்தினர் உணர்ச்சிக் குழப்பங்களான சிறிய உள நோய்களைக் கொண்டிருப்பது ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வந்துள்ளது. ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக போர்ச் சூழலில் வாழ்ந்து வந்ததினால் இறப்பின் வடு, இழப்புக்கள், இடம்பெயர்வுகள், பயங்கரங்கள் போன்றவை எம் எல்லோரையும் ஏதோ ஒரு வகையில் பாதித்து உள்ளன.

## 27 வீதத்தினர் பாதிப்பு

யாழ்ப்பாணக் குடா நாட்டில் நடத்தப்பட்டு பிரித்தானியா உள மருத்துவ சஞ்சிகையில் வெளியாகிய ஆய்வு ஒன்று பொது மக்களில் 27 விகிதத்தினர் நெருக்கீட்டுக்கு பிற்பட்ட உள வடுவினால் (Ptsd) பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றது. அத்துடன் 65% ஏதாவது ஒரு வகையான உளக் குழப்பத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டு உள்ளது. நாமெல்லோரும் விசர் என்பதல்ல இதன் அர்த்தம். இதெல்லாம் புரிந்து கொள்ளக் கூடியதும் 'அசாதாரண' சூழ்நிலையான போருக்கு எமது சாதாரண விளைவுமாகும்.

பாரிய உள நோயாளியாகிய உளமாய நோய் பொது மக்களில் ஒரு வீதத்தினரை தாக்குகின்றது. உளமாய நோய் சமூகத்தில் பாரிய அளவில் இல்லாவிட்டாலும் இதனால் குறிப்பிட்ட நபருக்கும், குடும்பத்துக்கும் சமூகத்திற்கும் கணிசமான பாதிப்பு நிகழ்கின்றது. துரதிர்ஷ்டவசமாக உள நோயைப் பற்றித் தப்பபிப்பிராயங்கள் எம்மிடையே உள்ளது.

உள நோயினால் பாதிக்கப்படுவது பற்றிய பாரதூரமான சமூக களங்கமனப்பான்மை எல்லாவற்றையும் விட மோசமான பிரச்சினையாகும். பாரிய உள நோயின் தாக்கத்தினால் எதிர்காலம் பாதிப்படைந்திருந்த முற்காலத்தைப் போலன்றி தற்போதைய நவீன மருத்துவத்தின் துணைகொண்டும் பொருத்தமான புனர்வாழ்வு நடவடிக்கைகள் மூலமும் மன நோயாளிகள் பயனுள்ள திருப்திகரமான வாழ்வை நடத்தக் கூடியவர்களாக உள்ளனர்.

> போரின் விளைவினால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கணிசமானோர் உள நலம் பாதிக்கப்பட்டுள்ளனர்.
>
> இவர்களை உறவினர் ''விசர்'' பிடித்தவர்களாகத் தப்பாகக் கணக்குப் போட்டு விடுகிறார்கள்.
>
> பாதிக்கப்பட்டவர்கள் தமது பாதிப்புகளை வெளியே கூறாது, ஆரம்பத்திலேயே சிகிச்சை பெறத் தவறுகிறார்கள்.
>
> இந்த நிலையை நீக்குவதற்கு சமூகத்தின் எல்லா மட்டத்தினரிடமும் விழிப்புணர்வு தேவைப்படுகிறது.
>
> அதனை நோக்காகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இக்கட்டுரை இரண்டு பகுதிகளாக உதயனில் வெளிவரும்.
>
> தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையை முகவரியாகக் கொண்டியங்கும் உள நல சங்கம் இந்த வாரத்தை உள நல வாரமாக்கி விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தி வருகிறது.

## ஆரம்பத்தில் இனங்காண வேண்டும்

எனவே மன நோயினால் பாதிக்கப்பட்டவரை ஆரம்ப கட்டத்திலேயே இனங்கண்டு பொருத்தமான சிகிச்சை அளிப்பது முக்கியமாகும். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை (தற்பொழுது மானிப்பாயில் இயங்கி வருகின்றது) பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை என்பவற்றில் மனநோய் கிளினிக்குகள் ஒழுங்காக இயங்கி வருகின்றன. உள்ளக நோயாளர்களுக்கான வசதிகளும் மேற்படி வைத்தியசாலைகளில் உள்ளன.

ஆனால் மிதமான உளப் பிரச்சினைகளைப் பொறுத்த மட்டில் குறிப்பிட்ட நபரோ, நண்பர்களோ, சமூக உத்தியோகத்தர்களோ பெரும்பாலான உதவியை செய்து விட முடியும். முதற்படியாக அமைவது இது பற்றிய விழிப்புணர்வே ஆகும்.

எமக்கு பிரச்சினை உண்டென்று புரிந்து கொள்ளத் தொடங்கும் பொழுது அதன் சிகிச்சைக்கான முதல் படியை எடுத்து வைத்தவர்களாவோம். ஆனால் இது பலருக்கு கடினமான வேலையாகும். பெரும்பாலானோர் தமது பிரச்சினையை மறுக்கின்றனர். அல்லது உணர்வுகளை அடக்கி விடுகின்றனர். துர்அதிர்ஷ்டவசமாக உளப் பிரச்சினைகள் ஆனது வெறுமனே எண்ணங்களில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டவுடன் அகன்றுவிடக் கூடியன அல்ல.

அனேகமாக இவை உடல் குணங்குறிகளான தலையிடி, நாரிநோ, மூச்சுவிடல் பிரச்சினைகள் போன்ற பல குணங்குறிகளாக வெளிவருகின்றன. இத்தகைய உடல் குணங்குறிகள் உடையவரை வைத்தியர் சோதிக்கும் பொழுது அங்கு எத்தகைய உடல் நோய்களையும் அவர் காண்பதில்லை. அவர்களின் உடல் நல்நிலையிலேயே இருக்கின்றது. இரத்தப் பரிசோதனை முடிவுகள், எக்ஸ் கதிர் படங்கள் போன்றவற்றிலும் வித்தியாசங்கள் இருப்பதில்லை. பனடோல், 'பிரிட்டோன், விற்றமின்களையே வைத்தியர் பொதுவாக வழங்குகின்றார்.

## மெய்ப்பாட்டு நோய்கள்

வைத்தியர்களை அணுகும் நோயாளர்களில் 30 வீதமானோர்கள் இத்தகைய மெய்ப்பாட்டு நோயினால் பாதிக்கப்பட்டவர்களே. இத்தகைய நோயாளிகள் வைத்தியர்களிடம் மீண்டும் மீண்டும் செல்வதால் வைத்தியர்களுக்கு வருமானம் ஈட்டித் தருபவர்களாக இருக்கின்றனர். சற்று ஆழமாக இந் நோயாளிகளை அணுகிப் பார்த்தால் உள சமூகப்பிரச்சினைகளே இவர்களின் உண்மையான பிரச்சினை என்பது தெரியவரும். இவைகள் குடும்ப அமைதியின்மை, வேலையின்மை, காணித்தகராறு போன்றவையாக இருக்கும். இவற்றுக்கு நாம் என்ன செய்யலாம் என்பதைச் சற்றுப் பார்ப்போம்.

பேராசிரியர் தயா சோமசுந்தரம்
தலைவர், உள மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

## கதைப்பதால் ஆறுதல்

இவற்றைப் பற்றி வெறுமனே கதைப்பது மட்டுமே பெரும் ஆறுதலைத் தரும். மனம் விட்டுக் கதைப்பதை கேட்கக் கூடியவர்களைக் கண்டு பிடிப்பதே பெரும் பிரச்சினையாகும். பெரும்பாலானவர்களுக்கு மற்றவர்களின் பிரச்சினைகளைக் கேட்பதற்கு நேரம் இல்லை. மற்றவர்கள் தமது மனப் பிரச்சினைகளை எம்முடன் கதைக்கும் போது நாம் அமைதியை இழக்கின்றோம். இப்பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்தோ எமக்குள் இது போன்று ஒழிந்திருக்கும் பிரச்சினைகளாலோ நாம் கலவரப்படுகின்றோம் என்பதே உண்மையாகும்.

இத்தகைய பிரச்சினைகளையோ உணர்வுகளையோ அடக்கி வைத்திருத்தலே அனேகமான மிதமான உளக் குழப்பங்களுக்குக் காரணமாகும். எமது கோபம், கவலைகள், விரக்திகளை அமுக்கி வைக்கின்றோம். அடக்கப்பட்ட உணர்வுகளை வெளிக்கொணர்ந்து அவற்றுடன் இயல்பாக இருக்க வைத்தலே உள சிகிச்சையின் நோக்கமாகும்.

உற்றுக்கேட்டலுக்கும், ஆதரவு வழங்குவதற்கும் தனிநபர்களுக்கு பயிற்சி அளித்தல் இதற்கு ஒரு முறையாகும். சாந்திகத்தில் 1988 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் உளவள துணையாளர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. சாந்திகம், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை, தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை என்பவற்றில் உளவளத்துணை வழங்கப்படுகின்றது. அக்கறையும், பொறுமையும் உடையவர்களால் பொதுவாக இவ் உதவியை வழங்க முடியும். மதகுருமார்கள், ஆசிரியர்கள், சமூகத் தலைவர்கள் போன்றோர் பாரம்பரியமாக இத்தகைய உதவிகளை வழங்கி வருகின்றனர்.

உணர்வுகளை வெளிக்கொணர குழுக்களை பயன்படுத்துவது இன்னொரு முறையாகும். தனிநபராக தமது உணர்வுகளை வெளிக்கொணர சங்கடப்படும் மூன்றாம் உலக நாடுகளில் குழு அமைப்பில் இதை வெளிக்கொணரலாம். ஒத்த பிரச்சினைகள் உடையவர்கள் ஒரு குழுவாக இருந்து தத்தமது பிரச்சினைகளைப் பகிர்ந்து ஒருவருக்கொருவர் உதவியையும் வழங்கிக் கொள்ளலாம். ஒருவர் பயன்படுத்தி நல் விளைவு கண்ட முறையை மற்றவர் முயற்சித்துப் பார்க்கலாம். உதாரணத்திற்கு மது அருந்தும் பழக்கத்தை நிறுத்தியவர்கள் (A.A), சித்திரவதையிலிருந்து மீண்டோர் விதவைகள், காணாமற் போனோரின் மனைவிகள் போன்ற குழுக்களைக் குறிப்பிடலாம்.

## குடும்ப ஒற்றுமை

எமது கலாசாரத்தில் உள சமூக பிரச்சினைகளைக் குணப்படுத்தக்கூடிய வளமாக குடும்பம் அமைந்துள்ளது. ஒரு சம்பவம் நிகழும் பொழுது குடும்பம் ஒரு தொகுதியாகச் செயற்பட்டு அதனை எதிர் கொள்கின்றது. குடும்ப அங்கத்தவர்கள் ஒரு சம்பவத்தை ஒரே மாதிரி உள்வாங்கி ஒரே வகையான துலங்கல்களைக் காட்டுவர். இதனால் குடும்பத்தை ஒருங்கிணைத்துவைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். குடும்ப ஒற்றுமை உறுதியாக்கப்பட வேண்டும். குடும்ப அங்கத்தவர்களிடையே நம்பிக்கை ஏற்படுவதற்கான செயல்முறைகளை ஊக்கப்படுத்த வேண்டும். பாரம்பரிய செயல்முறைகள் ஊக்கப்படுத்தப்படலாம். மேற்கூறிய விடயங்கள் கூட்டுக்குடும்பங்களுக்கும் பொருத்தமானதே. உணர்வுகளையும் மனத்தாக்கங்களையும் ஆக்கபூர்வமான முறையில் வெளிப்படுத்துவது தனிநபருக்கும், சமுதாயத்துக்கும் பயன்தரும்.

## கலைகள் ஊடாக உளச் சிகிச்சை

வரைதல், நாடகம், கதை சொல்லல், கவிதை எழுதுதல், பாடல், நடனம் போன்றவை முக்கியமாக சிறுவர்க்கு பயனுள்ள உணர்வுவெளிப்பாட்டு உளச் சிகிச்சை முறைகளாகும். நாடகமானது விழிப்புணர்வுக்கும் உணர்வுகளை ஒருங்கு சேர வெளிப்படுத்தவும் உதவும் பலமிக்க சமூக ஊடகமாகும். நுண்கலைப்பிரிவைச் சேர்ந்த திரு. குழந்தை சண்முகலிங்கம், திரு. சிதம்பரநாதன் யாழ்ப்பாண வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் சிவயோகன் ஆகியோரினால் படைக்கப்பட்ட ''அன்னை இட்ட தீ'' என்னும் சமூக நாடகம் இதற்கு நல்லதோர் உதாரணமாகும். இதில் மருத்துவ மாணவர்கள் பாத்திரமேற்று நடித்துள்ளனர். உளவடு சம்பந்தமான விழிப்புணர்வைபொது மக்களிடம் ஏற்படுத்தவும், உளவடு பட்டவருக்கு தனது உணர்வுக்கான வடிகாலாகவும் அவர் சிகிச்சையை நாட வைக்கவும் நாடகம் பாரிய பங்களிப்பைச் செய்தது. இந்நாடகம் வீடியோ செய்யப்பட்டதானது, பரந்துபட்ட மக்கள் அதனைப்பார்ப்பதற்கு வகை செய்தது.

வடக்குக் கிழக்கு அகதி முகாம்களில் நெறிப்படுத்தப்பட்ட விளையாட்டுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இது வளர்ந்தோரிடமும், சிறுவர்களிடமும் ஒரே வகையில் வரவேற்பைப் பெற்றது. சிறுவர்களின்நேரம்பயனுள்ள வகையில் கட்டமைக்கப்பட்டு அவர்களின் உடற்சக்தி ஆரோக்கியமான முறையில் வெளிப்படுத்தப்பட்டது. முக்கியமாக இது அகதி முகாமின் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கவும் நட்புறவை வளர்க்கவும், சிறுவர்கள் தமது உணர்வுகளை ஆக்கபூர்வமான முறையில் வெளிப்படுத்தவும் உதவியது.

(வளரும்) ★

# மானிப்பாயில் 5 தினங்களுக்கு தராசுகள் முத்திரையிடும் பணி

கொழும்புத்துறை, ஒக். 13

மானிப்பாய் பிரதேச சபை உப அலுவலகத்தில் நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணிகள் நடைபெறவுள்ளன.

இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க் கிழமையும் பின்னர் எதிர்வரும் 7 ஆம், 20 ஆம், 21ஆம் திகதிகளிலும் முத்திரையிடும் பணி நடைபெறும் என்றும் -

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில்லறை வியாபாரிகளும், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களும் பேக்கரி உரிமையாளர்களும் தத்தமது நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-30)

# கணனி மூலம் ஓய்வூதிய வவுச்சர்கள்

சண்டிலிப்பாய், ஒக். 13

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பணிமனையின் ஓய்வூதியப் பிரிவில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான இம் மாத வவுச்சர்கள் யாவும் கணனி மூலம் தயாரிக்கப்பட்டு தபாலில் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ஐ-135)

# விழிப்புலன் இழந்தோரை கௌரவிக்க ஏற்பாடு

தென்மராட்சி, ஒக். 13

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை ஒட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள விழிப்புலன் இழந்தவர்களைக் கௌரவிக்கவுள்ளனர். புதன்கிழமை சாவகச்சேரி றிபேர்க் கல்லூரியில் கழகத் தலைவர் பா. விஜயகுமார் தலைமையில் கௌரவிப்பு நடைபெறும். பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார்.

விழிப்புலன் இழந்தவர்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்திலிருந்து விழா மேடை வரை ஊர்வலமாக அழைத்து வரப்படுவர்.

(ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதரை நகல் எடுப்பதை 40 நாடுகள் தடை செய்தன!

## ஐரோப்பிய கவுன்ஸில் மாநாட்டில் முடிவு

ஸ்ராக்ஸ்பேர்க், ஒக். 13

மரபு அணுவில் இருந்து மனிதர்களை நகல் எடுக்கும் ''குளோனிங்'' என்ற நவீன விஞ்ஞான மருத்துவ முறையைத் தடை செய்வது என 40 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய கவுன்ஸில் தீர்மானம் எடுத்துள்ளது.

ஐரோப்பியக் கவுன்ஸில் நாடுகளின் உச்சி மாநாட்டின் முடிவிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

மரபணுவியல் தொடர்பான துறையில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் நுட்பத்தின் மூலம் மனிதர் ஒருவரை ஒத்த இன்னொருவரை — அவரைப் போல பலரை — ஆய்வு கூடத்தில் உருவாக்க முடியும். இந்த நவீன விஞ்ஞான முறையே ''குளோனிங்'' என அழைக்கப்படுகிறது.

இவ்வாறு மனிதரை நகல் எடுப்பதை ஐரோப்பியக் கவுன்ஸிலில் அங்கம் வகிக்கும் 40 நாடுகளும் தடை செய்யும்.

பிரிட்டன் உட்பட சில நாடுகள் இந்த மரபு அணுவில் இருந்து மனிதர்களை நகல் எடுக்கும் முறையை ஏற்கனவே தடைசெய்துள்ளன.

ஐரோப்பியக் கவுன்ஸில் இது தொடர்பாக தற்போது எடுத்துள்ள முடிவு உலகின் ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக அமைய வேண்டும் என்று மாநாட்டில் உரையாற்றிய பிரான்ஸ் நாட்டு அதிபர் ஐக்கிராக் வலியுறுத்தினார்.

தற்போது விதிக்கப்பட்டிருக்கும் தடை 'குளோனிங்' மூலம் மனிதர்களை நகல் எடுப்பதை மட்டுமே தடை செய்யும். ஏனைய உயிரினங்களில் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளை இது தடுக்காது. (ஐ)

# ''எல் நைனோ'' குறித்து உலக வங்கி எச்சரிக்கை!

வாஷிங்டன். ஒக். 13

''எல் - நைனோ'' எனப்படும் மிகச் சக்தி வாய்ந்த காலநிலைச் செயற்பாட்டால் உலகில் இவ்வாண்டு கடும் பாதிப்புக்கள் ஏற்படும் என்று உலக வங்கி எச்சரித்திருக்கிறது.

இதுவரை ஏற்பட்ட எல்லா எல் நைனோக்களினதும் ''தாய்'' என வர்ணிக்கப்படும் இந்த எல் நைனோவை எதிர்கொள்ளத் தயாராகுமாறு உலக நாடுகளிடம் உலகவங்கி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்வாண்டு ஏற்படும் ''எல் - நைனோ'' உலகின் சில பகுதிகளில் கடும் மழை வீழ்ச்சி மற்றும் வெள்ள அனர்த்தங்களைஏற்படுத்தும் என்றும்—

வேறு சில பிராந்தியங்களில் கடும் வரட்சியை ஏற்படுத்தும் என்றும் நிபுணர்கள் நம்புகின்றனர்.

பெரு நாட்டில் கிறிஸ்துவின் குழந்தை (எல் நைனோ) என அழைக்கப்படும் அனல் காற்றின் விளைவே இந்தக் காலநிலைப் பாதிப்பு என நம்பப்படுகிறது.

உலகின் சில பகுதிகளில் தற்போது ஏற்பட்டிருக்கும் புயல், மழை வெள்ளப் பெருக்கும், இந்தோனேசியாவில் ஏற்பட்டிருக்கும் கடும் வரட்சிக்கும் இந்த எல் நைனோவே காரணம் என்று கூறப்படுகிறது.

உலகில் இம்முறை ஏற்படவுள்ள ''எல் நைனோ'' கடந்த 150 வருடகாலத்தில் ஏற்பட்டவற்றில் மிகப் பெரிய எல் நைனோவாக இருக்கும் என்று உலக வங்கியின் சுற்றுச் சூழல் திணைக்களத்தின் பணிப்பாளர் றோபேட் வட்ஸன் தெரிவித்துள்ளார். (ஐ)

# 30 ஆண்டுகளின் பின் கியூபாவில் இவ்வாரம் புரட்சி வீரர் சே குவராவின் இறுதிச் சடங்கு

## ஹவானாவில் இறுதி அஞ்சலி



ஹவானா, ஒக் 13

லத்தீன் அமெரிக்காவின் புரட்சி வீரர் ஏர்னெஸ்ரோ சே குவராவின் 30 ஆவது ஆண்டு நினைவு தினம் கியூபாவிலும், ஆர்ஜென்ரீனாவிலும் கடந்த செவ்வாயன்று நினைவு கூரப்பட்டது.

கியூபா புரட்சியின் வெற்றிக்குப் பின் கெரில்லாப் போராட்டத்தைலத்தீன்அமெரிக்க நாடுகளுக்கு விஸ்தரிக்கும் முயற்சியாக பொலீவியாவில் அரசாங்கப் படைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய வேளை அங்கு வைத்து சே குவரா கைது செய்யப்பட்டார். எவ்வித விசாரணையும் நடத்தப்படாமலே மறுநாள் லாஹிகுரா என்ற கிராமத்தில் வைத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் கொல்லப்பட்டு 30 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன.

அண்மையில் பொலீவியாவில் வெல்லகிறண்டி என்ற நகரில் அகழ்வாராய்ச்சி மூலம் மீட்கப்பட்ட அவரது எலும்புக் கூட்டுத் தொகுதி அங்கிருந்து கியூபாவிற்கு எடுத்துவரப்பட்டது.

அந்த எலும்புக்கூடு அடங்கிய பேழை கடந்த சனிக்கிழமை முதல் ஹவானாவில் புரட்சிச் சதுக்கத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கின்றது. ஆயிரக்கணக்கான மக்கள் அவருக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தி வருகின்றனர். எதிர்வரும் வெள்ளிக்கிழமை அவரது எலும்புக்கூடுகள் சந்தா கிளாரா என்னும் இடத்தில் நினைவுக் கல்லறையில் அடக்கம் செய்யப்படவுள்ளது.

ஆர்ஜென்ரீனாவில் பிறந்த சே குவராவுக்கு அந்த நாட்டிலும் தற்போது உயர் கௌரவம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

''சே மீண்டும் திரும்பி வந்துள்ளார்'' என இடது சாரிப் பத்திரிகை ஒன்று தலைப்புச் செய்தி வெளியிட்டது சே குவரா நினைவாக அங்கு தபால் தலை ஒன்றும் வெளியிடப்பட்டது

''எங்கள் சே குவரா'' என்று பெயர் பொறிக்கப்பட்ட ரீ - சேட்டுக்களை அணிந்த சுமார் 40 ஆயிரம் மக்கள் கூடி சே குவரா கோஷமிட்டு கொண்டாடினர்.

### உலக அரங்கில்

## இலங்கைக்கான இந்தியத் தூதர்

புதுடில்லி ஒக். 13

இஸ்ரேலில் தற்சமயம் இந்தியத் தூதராகக் கடமையாற்றும் சிவ் ஷங்கர்மேனன் இலங்கைக்கான இந்தியத் தூதராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கான இந்தியத் தூதராகக் கடமையாற்றி வந்த நரேஷ்வர் தயாள் புதுடில்லியில் உள்ள வெளியுறவு அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து தூதர் பதவி வெற்றிடமாக உள்ளது.

நரேஷ்வர் தயாள் தற்போது வெளியுறவு அமைச்சின் கிழக்குப் பிரிவுக்கான செயலாளராகக் கடமையாற்றி வருகிறார். (ஐ)

## சர்வதேச சனத்தொகை மாநாடு சீனத் தலைநகரில் ஆரம்பம்

உலக சனத்தொகை தொடர்பான சர்வதேச மாநாடு சீனாவின் தலைநகர் பீஜிங்கில் நேற்று ஆரம்பமானது.

4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த மாநாட்டில் உலகின் பல நாடுகளையும் சேர்ந்த சுமார் ஆயிரத்து 040 நிபுணர்கள் கலந்து கொள்கின்றனர்.

குடும்பக்கட்டுப்பாடு, குடிவரவு இறப்பு விகிதம், சனத்தொகை அதிகரிப்பால் எழுந்துள்ள அச்சம் ஆகிய முக்கிய விடயங்கள் பற்றி இந்த மாநாட்டில் ஆராயப்படவுள்ளது. (ஐ)

## ஆப்கானில் 70 பேருக்கு சிரச்சேதம்

ஆப்கானிஸ்தானில் கஸெல் அபாட் என்ற சிறு கிராமத்தில் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உட்பட சுமார் 70 பேர் தலிபான்களால் சிரச்சேதம் செய்யப்பட்டனர் என்று ஈரானின் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

உடல்கள் மோசமாகச் சிதைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட இவர்களின் சடலங்கள் பொதுமக்களால் அடக்கம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆர்ஜென்ரீனா விமானம் வீழ்ந்து நொறுங்கியது!

### 75 பயணிகளும் மரணம்

பிரேக் பெந்தோஸ், ஒக். 13

ஆர்ஜென்ரீனாவின்பயணிகள் விமானம் ஒன்று வானில் பறந்து கொண்டிருந்த சமயம் திடீரென வீழ்ந்து நொறுங்கியது. அதில் பயணஞ் செய்து கொண்டிருந்த 75 பயணிகளும் பலியாகினர்.

உருகுவே நாட்டு எல்லைப்பகுதியில் கரடு முரடான சதுப்பு நிலப்பகுதியிலேயே விமானம் வீழ்ந்துள்ளது. தரைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு கடைசியாக அனுப்பிய செய்தியில் தலைநகர் புவனர்ஸ் அயர்ஸ் பகுதியில் பரந்துள்ள புயலைத் தவிர்ப்பதற்காக விமானத்தை திசை திருப்புவதாக அந்த விமானத்தின் தலைமை விமானி தெரிவித்திருந்தார்.

ஆர்ஜென்ரீனா மற்றும் உருகுவே நாட்டு [illegible] பணியாளர்கள் விமானம் வீழ்ந்த இடத்துக்கு உடன் விரைந்தனர். (ஐ)

## 29 பேருக்கு வீடமைப்புக் கடன்

சண்டிலிப்பாய், ஒக். 13

2 ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா வீடமைப்புக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 29 பேருக்கு வீடமைப்புக்கான கடன் வழங்கப்பட்டுள்ளது.

கட்டம் கட்டமாக இக்கடன் வழங்கப்பட்டிருப்பதாக சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான வீடமைப்புத் தொழில் நுட்ப உத்தியோகத்தர் எஸ். நாகேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-135)

## உரும்பிராய் இந்து பரிசளிப்பு விழா

திருநெல்வேலி, ஒக். 13

உரும்பிராய் இந்துக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவும், ஸ்தாபகர் தினமும் நாளை மறுதினம் புதன் கிழமை முற்பகல் கல்லூரி அதிபர் - ம. சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறும். இவ் விழாவில் பிரதம அதிதியாக வலயம் - 2 கல்விப்பணிப்பாளர் சி. சிவராஜா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக கோப்பாய்க் கோட்ட கல்விப் பணிப்பாளர் ஆ. இராசேந்திரன் கலந்து கொள்வார். ஸ்தாபகர் நினைவுரையை ஆசிரியமணி அ. பஞ்சா[illegible] [illegible] கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஐ-135)

## மதுவரிக் காவலர் பதவிக்கு எழுத்துப் பரீட்சை நடக்கும்

யாழ். மதுவரித் திணைக்களத்தில் நடத்தப்பட்ட மதுவரிக்காவலர்கள் பதவிக்கான நேர்முகப் பரீட்சையில் தோற்றிய 289 பேரின் பெறுபேறுகள் கொழும்பிலுள்ள மதுவரித்திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 30 - 9 - 97 ஆம் திகதி தொடக்கம் ஐந்து தினங்கள் இங்கு நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இவர்களுக்கு எதிர்வரும் நவம்பர் மாதத்தில் பரீட்சைத் திணைக்களத்தினால் எழுத்துப் பரீட்சை ஒன்று நடத்தப்படவுள்ளது.

பொது அறிவு மற்றும் உளச்சார்பு ஆகிய இரு பிரிவுகளில் இப் பரீட்சை நடத்தப்படுமெனவும், இதில் சித்தியடைபவர்கள் மதுவரி காவலர்களாக எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நியமனம் பெறுவார்கள் என்றும் யாழ். மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் வீரவாகு துரைராஜா தெரிவித்தார். (ஐ-135)

## கடந்த ஆண்டு வடமராட்சி கிழக்கில் கடலில் காணாமற் போனவர் பற்றி உறவினருக்குத் தகவல்

கடந்த வருடம் ஜூன் மாதம் வடமராட்சி கிழக்குக் கடலில் காணாமற் போனதாக நம்பப்பட்ட சாவகச்சேரி சந்தை வியாபாரியொருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தற்போது உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் உள்ள உறவினர்களுடன் இணைந்து கொள்வதற்தாக படகில் சென்ற சமயம் இவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளியன்று யாழ். செயலகத்திற்கு வரவழைக்கப்பட்ட இவரது உறவினர்களிடம் இவர் உயிருடன் இருப்பது பற்றிய தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த கந்தசாமி அன்பழகன் (அன்பு. வயது 24) என்பவரே படையினரால் கைது செய்யப்பட்டவராவார். (ஐ-117)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாதஸ்வர வித்துவான் இ. கேதீஸ்வரன்
# பாராட்டு விழாச் சிறப்பு மலர்

13-10-1997

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி

நாதஸ்வர வித்துவான் இ.கேதீஸ்வரன் அவர்களுக்கு இணுவில் வாழ் மக்கள் பாராட்டி கௌரவித்துச் சிறப்பிக்கின்ற நிகழ்ச்சியை அறிந்து மனமகிழ்ச்சியடைகின்றேன். இன்று இசைக்கலைஞர்கள் மத்தியில் வளர்ந்து வருகின்ற இளம் கலைஞர்களில் ஒருவராக கேதீஸ்வரன் திகழ்கின்றார்.

அடக்கமும், பக்தியும், குருவிசுவாசமும், செய்யும் தொழிலில் ஆர்வமும் கொண்ட ஒரு நாதஸ்வரக் கலைஞன். சமய தீட்சை பெற்று சமயநெறியோடு வாழ்கின்றவர். இவர் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து இசையுலகில் பல கௌரவங்களைப் பெற்றுவாழ இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்,

திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர்.

## தர்மசாஸ்தா குருகுல அதிபர் ஆசி

நாதஸ்வர வித்துவான் திருவாளர். இரத்தினவேல் கேதீஸ்வரன் நாதஸ்வர இன்னிசையில் தனக்கென்று தனித்தான பாணியை வகுத்துக் கொண்டிருக்கும் ஓர் இளம் நாதஸ்வர வித்துவானாவார். எப்போதும் நெற்றியில் திருநீறும், சந்தனத் திலகமும், தெய்வபக்தியோடு அடக்கமும் கொண்டு விளங்குபவர்.

மூத்த நாதஸ்வர வித்துவான்களோடு சேர்ந்து வாசிக்கும் போது அவர்களுக்கு ஏற்றவாறும் இளம் வித்துவான்களோடு வாசிக்கும் போது அவர்களுக்கு ஏற்றவாறும் ஒத்து வாசிக்கும் குணவியல்புள்ளவர். தன் சிரேஷ்ட குருவாக விளங்கும் நாதஸ்வர சக்கரவர்த்தி திரு. என். கே. பத்மநாதனுடன் ஜோடியாக வாசிக்கும் போது அவரோடு மிக்க மரியாதையுடனும், இருக்கும் போது அவருடன் சேர்ந்து சமமாக இருக்காமல் சற்றுப் பின்தள்ளி இருந்து அடக்கத்தோடு வாசித்தவர்.

பல பிரபல நாதஸ்வர வித்துவான்களை தான் குருமார்களாகப் பெற்றிருந்தாலும் திரு. என். கே. பத்ம

(8 ஆம் பக்கம் பார்க்க)

## துர்க்காதுரந்தரி ஆசியுரை

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தோடு கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக நாதஸ்வர இசை வழங்கி அம்பாள் அருளைப் பெற்றுவருபவர் கேதீஸ்வரன் அவர்கள்.

சைவப் பண்பாட்டிலே ஊறித் திளைத்தவரும், அம்பாள் உபாசனையை நன்கு பயனுடையதாக்கிக் கொண்டவரும் நாதஸ்வர வித்துவத்தன்மை உடையவரும் இவர் என்பதை இந்த நாடு நன்கு அறியும்.

அந்தணர்களிடத்தும் அறிஞர்களிடத்தும் மிகவும் பயபக்தியோடு மதிப்பளித்து வாழ்பவர் இவர்.

எளிமையும், இனிமையும், பணிவும், பக்தியும் இவருடைய கலைவாழ்வுக்கு அணிகலன்களாக அமைகின்றன என்று கூறுவதில் மிகையொன்றுமில்லை.

எமது தேவஸ்தானத்தின் பெயரில் கலைஞர் திரு இ. கேதீஸ்வரன் அவர்களுக்கு பாராட்டையும் வாழ்த்தை கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## இணுவில் சிவகாமி அம்மன் கோயில் பிரதம சிவாச்சாரியார் ஆசி

''இசையால் வசமாகா இதயம் எது''? குழந்தை முதல் இறைவன் வரை அனைவரும் இசையின்பத்தால் பேரின்பமடைகிறார்கள். இசையானது பல்வேறு வாத்தியங்களூடாக பரிமாறப்படும் போது இசை செவிக்கு இன்பத்தை மேலும் தருகிறது. இவ்வாறான பல வாத்தியங்களுக்குள்ளே மங்கள வாத்தியம் என்ற சிறப்புப் பெயர் பெறும் நாதஸ்வரம், தவில் இவ்விரண்டும் பெரும் முக்கியத்துவமுடையவை.

இவ் வாத்தியங்களை சிறப்புறக் கையாளும் கைதேர்ந்த பல கலைஞர்கள் இலங்கை நாடெங்கும் உள்ளனர். அக் கலைஞர்களுக்குள் அளவையூர் நாதஸ்வர வித்துவான் திரு இ. கேதீஸ்வரன் அவர்களும் ஒருவர்.

சமய தீட்சை பெற்று சமயானுஷ்டானமான திரிபுண்டரம் தரித்து ஆலயப்பணியில் அவர் ஈடுபடும் போது அக்கலைஞரை மனமாரப் பாராட்டாதவர்கள் இல்லை. அவரிடம் கலைத்திறமை, அடக்கமுடைமை இரண்டும் இணைபிரியாமல் சேர்ந்துள்ளன.

இக் கலைஞரின் இசைக்கலைப்பணி உலகமெங்கும் பரவி எமது சமயத்தின் நலத்தை நாடெங்கும் நிலை நிறுத்த வேண்டும் என உளமார வாழ்த்தினைக் கூறி,

## 'கலாசூரி'' என். கே. பத்மநாதன் வாழ்த்து

அளவையூர் நாதஸ்வர வித்துவான் திரு இ. கேதீஸ்வரன் அவர்கள் என்னுடன் பல காலமாக, சுமார் பத்தொன்பது வருஷங்கள் சோடியாக நாதஸ்வரம் வாசித்து வந்தார்கள். அவருக்குக் கௌரவப் பட்டம் கிடைப்பதையிட்டு மகிழ்ச்சியடைபவர்களில் நான் முதன்மை வகிக்கின்றேன்.

அவர் மேன்மேலும் நாதஸ்வர இன்னிசையில் சிறந்து விளங்க எல்லாம் வல்ல முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பல நாதஸ்வர மேதைகளிடம் பயின்று முன்னுக்கு வந்தவர் கேதீஸ்

நாதஸ்வர வித்துவான் கேதீஸ்வரனின் பாட்டனார் திரு. சுப்பையாபிள்ளை அவர்கள் திருப்புகலூர் ஆலய ஆஸ்தான நாதஸ்வர வித்துவானாகப் புகழ் பெற்றவர். தாயாரின் தந்தையார் வேதாரண்ய ஆலயத்திலே ஆஸ்தான நாதஸ்வர வித்துவானாகப் பணியாற்றியவர். தந்தையார் இரத்தினவேல் ஈழவள நாட்டிலே சிறந்த நாதஸ்வர வித்துவானாகத் திகழ்ந்தவர்.

இத்துணை சிறந்த பாரம்பரியத்தைப் பெற்ற திரு. இ. கேதீஸ்வரன் தனது ஏழாவது வயதில் ஆரம்ப சிட்சையைத் தன் தகப்பனாரிடம் பெற்றார். பத்து வயதில் தன் தந்தையை இழந்த அவர் அவரது பெரிய தந்தையார் மாணிக்கம் முத்துக்குமார நாதஸ்வர வித்துவானிடமும் நாதஸ்வர வித்துவான்கள் சு.க இராசாவிடமும், கோண்டாவில் நாராயணசாமிப் பிள்ளையிடமும், தென் இந்தியா பந்தநல்லூர் ரி. ஆர். தட்சிணாமூர்த்திப் பிள்ளையிடமும் முறையாகச் சிட்சை பெற்றவர்.

ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக நாதஸ்வர வித்துவான் என். கே பத்மநாதனிடம் இவர் கற்றுக் கொண்டது சமுத்திரம் அளவாகும். பிரபல வாய்ப்பாட்டு வித்துவான் திரு. ஐயாக்கண்ணு தேசிகரிடமும் கீரிமலை நாகம்மா கதிர்காமரிடமும் கொல்லங்கலட்டி இசை மணி ப. செல்லத்துரையிடமும் என்னிடமும் கீர்த்தனைகள் பல பயின்றார். மாவிட்ட

நாதஸ்வர வித்துவான்
**M.B.பாலகிருஸ்ணன்**

புரம் திரு. சு. க. இராசா அவர்களுடனும், பல்லவி மேதை எஸ். எம். இராஜதுரை அவர்களுடனும் ஒவ்வொரு ஆண்டு சேர்ந்து வாசித்திருக்கிறார்.

1964ஆம் ஆண்டு என்.கே. பத்மநாதனுடன் முதலாவது கச்சேரி அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்திலே நடைபெற்றது. அப்பொழுது கேதீஸ்வரன் தன் நாதஸ்வரத்தில் சுருதி சேராமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் போது அவரது குருவிடம் இருந்து தொடையில் ஹஸ்தம் ஸ்பர்சம் பெற்றார், அன்று தொடங்கி இன்று வரை அவருக்குச் சுருதி விலகியதே இல்லை.

தனது ஆத்மார்த்த குரு என். கே. பத்மநாதனைப் பற்றி அவரே கூறுகிறார் :-

21 ஆண்டுகள் அவருடன் சேர்ந்து வாசித்தேன். அக்காலம் என் வாழ் நாளில் பொற்காலமாகும். எப்படி ஜோடியாக வாசிக்க வேண்டுமென்ற அனுபவத்தை அவரிடமிருந்தே பெற்றேன். எனது குருவின் கம்பீரமான ஆலாபனைகள், கீர்த்தனைகள் வாசிக்கும் காலப்பிரமாணம், பல்லவி, மல்லாரி போன்றவை வாசிக்கும் மிடுக்கு ஸ்வரம் வாசித்து ராகமாலிகை வாசிப்பது இவ்வளவும் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு நாதஸ்வர வித்துவானைக் காண்பதரிது. அவரின் ஆசியாலும் 21 ஆண்டுகள் அவரது வாசிப்பைச் செவிமடுத்துக் கூட வாசித்த அனுபவத்தாலும் ஏதோ இயன்றவரை இறைவனுக்கு நாதஸ்வர ஆராதனை செய்து வருகிறேன்.

நாதஸ்வர மேதைகள் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை, எஸ். அப்புலிங்கம் பிள்ளை. சாவகச்சேரி பஞ்சாபிகேசன், இணுவில்கந்தசாமிப்பிள்ளை, என். ஆர். கோவிந்தசாமி, எம். எஸ். சண்முகநாதன், பி. எஸ். பிச்சையப்பா, அளவெட்டி எம். பி. பாலகிருஷ்ணன், கோண்டாவில் வி. ஏ. பாலகிருஷ்ணன், இணுவில் என். ஆர். சுந்தரமூர்த்தி, எஸ். எஸ். சிதம்பரநாதன், பி. நாகேந்திரன், எம். பி. சேகர், சுதாகர் முதலியோரும் —

தவில் வித்துவான்கள் வலங்கைமான் சண்முகசுந்தரம்பிள்ளை, லயஞானபூபதி ப. தெட்சணாமூர்த்திப் பிள்ளை, விவகாரவித்வமணி என். ஆர். சின்னராசா, கே. கணேசபிள்ளை, வி. என். குமாரகுரு, திரு.ராஜகோபால பிள்ளை, திரு. பி. சின்னப்பழனி. என். ஆர். புண்ணியமூர்த்தி, கே. நித்தியானந்தம், கே.சிவகுமார், ரி.உதயசங்கர், ரவி, சுதா ஆகிய எல்லோரும் எனக்கு வழிகாட்டிகளாகத் திகழ்ந்தார்கள் — என்று நன்றியுடன் கூறுகிறார் திரு. கேதீஸ்வரன்.

கேதீஸ்வரன் அவர்கள் என். கே. பத்மநாதன் அவர்களோடு லண்டன், பாரிஸ், மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து முதலிய நாடுகளில் கச்சேரி செய்திருக்கிறார். திருப்பனந்தாள் ஆதீனத்தில் எம்.பி. நாகேந்திரனுடனும், அவுஸ்திரேலியாவில் ஆர். ஞானசம்பந்தன், ஆர். முருகதாஸ் அவர்களுடனும் விஷேஷ கச்சேரிகள் நடத்தியிருக்கிறார். லண்டன், ஆஸ்திரேலியாவிலும் வண்ணை சிவன் ஆலயத்திலும் தங்கப் பதக்கம் பெற்றிருக்கிறார்.



நாதஸ்வர வித்துவான் இ. கேதீஸ்வரன்

பல நாதஸ்வர மேதைகளிடம் நாதஸ்வர இசைக் கலையை முறையாகப் பயின்று, முழுமையாகத் தேர்ச்சி பெற்று இத்துறையில் கலைஞர்கள், சுவைஞர்கள் மதிக்கும் சிறந்த வித்துவானாக முன்னுக்கு வந்துள்ளார். முயற்சியும் உழைப்பும் மிக்க அடக்கமான கலைஞர் இவர்.

எனது அன்புக்கும், ஆதரவுக்கும் பாத்திரமாகி இருக்கும் இந்த இளம் நாதஸ்வர வித்துவான் மேன்மேலும் சிறப்போடு வாழப் பிரார்த்திக்கின்றேன். ★

## பண்புநிறை கலைஞர்

கலைஞன் என்பவன் ஒரு நாட்டின் பொதுச் சொத்து அளவையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. இ. கேதீஸ்வரன் அவர்களும் கர்நாடக இசையுலகில் பொதுச் சொத்தாக கணிக்கப்படவேண்டியவரே. அவர் ஒருசிறந்த நாதஸ்வர வித்துவானாக இருந்த போதிலும் அவரிடம் காணப்படும் தனிப்பட்ட பண்புகளும் குண இயல்புகளும் பக்தி பூர்வமான அவரது இசைத்துறைக்கு மேலும் மெருகூட்டும் சாதனங்களாக விளங்குகின்றன.

இவரது பக்தி பூர்வமான இசைச் சேவை நொந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்: ↓

எவரெஸ்ட் கல்வி நிறுவனம்
இணுவில்

வேவி இரும்பகம்
இல. 53, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்

கண்ணன் [illegible]
மருதனார்மடம், இணுவில்

சிவன் ஸ்ரோர்ஸ்
இணுவில் மேற்கு, இணுவில்

நாதன் சகோதரர்
கே. கே. எஸ். வீதி, இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி பொது சந்தையை புனரமைக்க திட்டம் சமர்ப்பிப்பு

திருநெல்வேலி, ஒக். 13

திருநெல்வேலி பொதுச் சந்தையை புனரமைப்புச் செய்யத் திட்டமிட்டப்பட்டுள்ளது.

சந்தையைப் புனரமைப்புச் செய்வதற்கான 30 லட்சம் ரூபா செலவிலான உத்தேச திட்டம் ஒன்றை நல்லூர் பிரதேச சபை தயாரித்துள்ளது.

வடபகுதி மீள்குடியேற்ற புனர்வாழ்வு அதிகாரசபையின் கோரிக்கையை அடுத்து உத்தேச திட்டம் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப வேலைத் திட்டத்துக்கு நிதி கிடைக்கும் பட்சத்தில் திருநெல்வேலி சந்தை புனரமைப்பு வேலைகள் உடன் ஆரம்பமாகும். (ஐ-135)

# மதுவரித் திணைக்களத்துக்கு வாகன வசதிதரக்கோரிக்கை

யாழ். மதுவரித் திணைக்களத்திற்கு இதுவரை வாகனம் எதுவும் வழங்கப்படவில்லை.

திணைக்களப் பணிகளை துரிதமாக மேற்கொள்ளுவதற்கு வாகன வசதி இருக்க வேண்டியதன் அவசியம் பற்றி கொழும்பிலுள்ள மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு வட மாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் ஊடாக கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போது யாழ். மாவட்டத்தில் இரண்டு மது வரிப்பரிசோதகர்களும், ஏழு மதுவரிப் பாதுகாவலர்களுமே பணியாற்றி வருவதால் கசிப்பு உற்பத்தி தடுப்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆளணி பற்றாக்குறையாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-135)

# கிழக்கில் வாக்கெடுப்பு நடத்துவது சாத்தியமா?

## அநுரா பண்டாரநாயக்க கேள்வி

கிழக்கு மாகாணத்தில் 75 சதவீதமான பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அப்படியிருக்கும் போது வடக்கு — கிழக்கு இணைப்புத் தொடர்பாக மக்கள் கருத்தறிய அரசாங்கம் எவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பை நடத்த முடியும்?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஐ.தே.க உறுப்பினரான அநுரா பண்டாரநாயக்க.

அவசரகாலச்சட்ட நீடிப்பு விவாதத்தில் அவர் உரையாற்றினார்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் மக்கள் எவ்வாறு வாக்களிக்க முன்வருவார்கள்? அதற்கும் புலிகள் இடமளிப்பார்களா? புலிகளின் தடையை மீறி மக்கள் செயற்பட்டால் அது ஆபத்தான முடிவையே உண்டு பண்ணும்.

இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது அங்கு வாக்கெடுப்பு ஒன்றை நடத்த அரசாங்கம் முற்படுமானால் மிகவும் மோசமான விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-5)

# பளையில் முதியோர் தின விழா

தென்மராட்சி, ஒக். 13

சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி பளை பிரதேச செயலகத்தினர் நடத்தும் முதியோர் தின விழா எதிர்வரும் வியாழக்கிழமை பளை மத்திய கல்லூரியில் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன். தலைமையில் நடைபெறும்.

பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட வயது முதிர்ந்த முதியவர்கள் இவ்விழாவில் கௌரவிக்கப்படவுள்ளதாக பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவினர் தெரிவித்தனர்.

முதியோர் தினவிழாவையொட்டி பிரதேச செயலக மட்டத்தில் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் சித்தி பெற்றோர்களுக்கான பரிசில்களும் அங்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ். மாநகரசபைப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ. ஆர். வி. தடுப்பூசி மருந்து போடும் திட்டத்தின் கீழ் இன்று திங்கள் காலை 8- 30 மணி தொடக்கம் 10 - 30 மணிவரை நல்லூர் கோயில் முன்பாக பருத்தித்துறை வீதியில் உள்ளசிகிச்சை நிலையத்திலும், 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்திலும்— தடுப்பூசி ஏற்றப்படும்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 -30 மணி முதல் 10 - 30 மணிவரை ஜெ பிளி மகப்பேற்று நிலையத்திலும்,—

11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை ஒ. எல். ஆர். பாடசாலை அண்மையிலும் தடுப்பூசி போடப்படும், (ஐ-15)

# சரசாலை இளம் தம்பதியர் லண்டனில் மர்ம மரணம்!

தென்மராட்சி, ஒக். 13

திருமணமாகி நான்கு மாதங்கள் சென்ற இளந் தம்பதியர் மர்மமான முறையில் வீட்டில் சடலங்களாகக் காணப்பட்ட சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை லண்டனில் இடம் பெற்றுள்ளது.

சரசாலை வடக்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் யோகராசாவும் (வயது 34) அவரது மனைவியுமே மரணமானதாக இங்குள்ள உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களது மரணத்துக்கான காரணம் எதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ-117)

# நீண்டகாலம் சேதமடைந்துள்ள வல்வை மத்திய சந்தை

## புனரமைக்க உதவுமாறு கோரிக்கை

நெல்லியடி, ஒக். 13

சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட வியாபாரிகள் விற்பனையில் ஈடுபட்டுவந்த வல்வெட்டித்துறை மத்திய சந்தை தற்பொழுது சோபை இழந்த நிலையில் காணப்படுகின்றது.

கடந்த 1987 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் இச் சந்தை பெரும் சேதமடைந்து இயங்க முடியாதிருந்து வருகிறது.

உருக்குலைந்துள்ள இச் சந்தைக் கட்டடத் தொகுதியில் சுமார் 25 -க்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்களும் இயங்கிவந்தன.

கடந்த சில வருடங்களில் இடம்பெற்ற போர் அனர்த்தங்களின் போது இச் சந்தை மேலும் சேதமடைந்தது.

மக்களின் நலன் கருதி வல்வெட்டித்துறை நகர சபையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக தற்பொழுது இச் சந்தையின் ஒரு சிறிய பகுதியில் மட்டும் ஐந்து வியாபாரிகள் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

சேதமுற்றிருக்கும் இச் சந்தைக் கட்டடத்தை புனரமைப்புச் செய்ய உதவுமாறு வல்வெட்டித்துறை நகர சபை அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ-109)


கண்ணீர் அஞ்சலி

எமது லயன்ஸ்கழக உறுப்பினரான
லயன். இ. நடராஜா
அவர்களின் அன்பு மனைவி
திருமதி ஜெகதீஸ்வரி நடராஜா
அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

லயன்ஸ் கழகம்,
நல்லூர்.

(சி-1756)


# நாதஸ்வர வித்துவான் இ. கேதீஸ்வரன்

## பாராட்டு விழாச் சிறப்பு மலர்

7 ஆம் பக்கத் தொடர்ச்சி

### பிரதம சிவாச்சாரியார்....

நீண்ட ஆயுளும், ஆரோக்கியமான உடல் வலிமையும் பெற எல்லாம் வல்ல இணுவில் சிவகாமி அம்பிகையின் பொற்பாதம் போற்றுகின்றேன்.

சுபம்.

வேத சிவாகக் கிரியாரத்னம்
சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள்
பிரதம குரு
சிவகாமி அம்மன் கோயில்,
இணுவில்.

### தர்மசாஸ்தா குருகுல....

நாதன் அவர்களிடமே தான் அறிந்து கொண்டது அதிகம் என்று அடிக்கடி கூறுவார். அது முற்றிலும் உண்மை.

கேதீஸ்வரன் அவர்கள் என். கே. பத்மநாதன் அவர்களோடு சேர்ந்தும் உதயசங்கர், இராமதாஸ் இவர்களோடும் செய்த கச்சேரிகள் கானாமிர்தமானவை. நினைத்துப் நினைத்து பூரிப்படையக் கூடியவை.

திரு. கேதீஸ்வரனுக்கு இன்று பட்டமளிப்பு விழா நடைபெறுவது பெருமிதம் தருவதாகும். அவர் மேலும் புகழ் பெற்று விளங்க இணுவில் சிவகாமி அம்மை அருள் புரிவாராக.

''வேதாகம ஞான பாஸ்கரன்''
சிவஸ்ரீ தா, மகாதேவக் குருக்கள்
இணுவில்,

### பண்புநிறை...

போயுள்ள மனித மனங்களுக்கு ஓர் அரு மருந்தாக அமைந்துள்ளது இவரது சேவையும் பக்தி பூர்வமான இசைத் தொண்டும் பல்லாண்டு காலம் நீடித்து வாழ்வதற்கு சிவகாமி அம்பிகையின் அருள் பெற வாழ்த்துகின்றோம்.

கே. எஸ். ஆனந்தன்
தலைவர், இந்துமகாசபை, இணுவில்.


கணேசன் ரேடிங் கொம்பனி
கே. கே. எஸ். வீதி, இணுவில்

கணேசன் சென்ரர்
(பவலூம் கடை)
தாவடி வடக்கு, கொக்குவில்

சிற்றி காமன்ஸ்
இணுவில் மேற்கு

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
பிள்ளையார் அரைக்கும் ஆலை
அங்கிலிப்பாய், இணுவில்

மல்ரி - ஒயில் இன்டஸ்றீஸ் லிமிட்டட்
கே. கே. எஸ். வீதி, இணுவில்

சாந்தி ரெக்ஸ்ரையில்ஸ்
157, நவீனசந்தை
யாழ்ப்பாணம்.
கிளை: கே. கே. எஸ். றோட்,
இணுவில்

இணுவையூர் கனகதயாபரன் களஞ்சியம்
64, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

லிங்கம் ஸ்ரோர்ஸ்
பரராசசேகரப் பிள்ளையார்
கோயிலடி, இணுவில்

தெஸ்னியன் கல்வி நிலையம்
கே. கே. எஸ். வீதி, இணுவில்



கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்

எமது முன்னாள் பேராயர்
அதிவண. D. J. அம்பலவாணர் ஐயா

அங்கங்கள் வலுவிழந்து போனவர்க்கும்
அகிலத்தில், வாழ்வொன்று உண்டென்ற
அசையாத நம்பிக்கையை ஊட்டவென
''நம்பிக்கை இல்லந்'' தந்து — சமூகத்தில்
நாமும் ஓர் அங்கமென தலைநிமிர்ந்து
வாழ வழிவகுத்த எங்கள் அன்னையே
கலங்கரைத் தீபமே! நீங்கள் இறைவனோடுமட்டுமல்ல
எங்கள் இதயங்களிலும் வீற்றிருக்கிறீர்கள்.

ஆயரின் பிரிவுத் துயரில் தவிக்கும்
குடும்பத்தினர்க்கு எங்கள் உள்ளார்ந்த அனுதாபங்கள்

"நம்பிக்கை இல்லக்" குடும்பம்,
இணுவில்.

(50464)



நாதஸ்வர இசை மூலம் இசைத்துறைக்கு
பெருமை தேடித்தந்து கொண்டிருக்கும்
அளவையூர் நாதஸ்வர வித்துவான்
இ. கேதீஸ்வரன்
அவர்களுக்கு
'சங்கீத நாதஸாகரம்'
என்ற பட்டத்தை இணுவில் சிவகாமி அம்மன் ஆலய இந்து மகாசபையினர் இன்று வழங்கி கௌரவிக்கும் வேளையில் பிராமண இளைஞர் சமாசத்தினர் நாதஸ்வர வித்துவானைப் பாராட்டி வாழ்த்துகிறார்கள்.

பிராமண இளைஞர் சமாஜம்,
உரும்பராய்.

(சி/1755)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## வீழ்ச்சியுறும் கல்வித் தரம்

யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களின் கல்வித் தரம் அண்மைக் காலமாக வீழ்ச்சி கண்டுள்ளது குறித்து வடக்கு—கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி பெரும் கவலை தெரிவித்திருக்கிறார்.

உதயனுக்கு வழங்கிய செவ்வியில், குடாநாட்டு மாணவரின் கல்வி நிலை குன்றியதற்கான காரணங்களை இனங்கண்டு, தொகுத்து, வகுத்து விவரித்துள்ளார். அத்தோடு இப்பகுதி மாணவரின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக அரச தரப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளையும் விவரித்திருக்கிறார்.

குடாநாட்டு மாணவர்களின் கல்வித் தரம் மிக மிகக் கீழிறங்கி வருவது ஒன்றும் புதிய விடயம் அல்ல. வருடாந்தம், மாதாந்தம், நாளாந்தம் என்ற கணக்கில் யாழ்ப்பாண மாணவரின் கல்வித் தரம் கீழ்நோக்கி இறங்கி வருகிறது.

கல்வியில் சிறந்து விளங்கிய, முன்னணி வகித்த, யாழ்ப்பாணச் சமூகம், அதனையே தனது மிகப் பெரிய சொத்தாகத் தேடிக் கொண்டு நாடளாவிய ரீதியில் மட்டுமன்றி, உலகளாவிய மட்டத்திலும் பெருமையும், சிறப்பும், திறமையும் கொண்டிலங்கிய யாழ்ப்பாணச் சமூகம், இப்போது அத்துறையில் மிகப் பின்தங்கி விட்டது.

தீய சக்திகள் — கொழும்பு அரசாங்கங்கள் — தமிழர்களுக்குரிய கல்வி வளங்களையும், வசதிகளையும் வெட்டி அத்துறையில் பாகுபாடு காட்ட ஆரம்பித்த போதே—போருக்கு முன்னரே — யாழ்ப்பாணத்தின் கல்வித் தரம் மெது மெதுவாகத் தேயத் தொடங்கியது.

போர் தொடங்கியதிலிருந்து நிலைமை மேலும் மோசம் அடையலாயிற்று, கல்வி வசதிகள் மிகப் பெரிய அளவில் வெட்டப்பட்டன. அத்தோடு, மாணவர்கள் கல்வியில் மனமொன்றிப் படிக்க முடியாதவாறு பதற்ற நிலை, பயங்கர நிலை உருவாக்கப்பட்டது. குப்பி விளக்குத் தானும் எரித்துப் பயில்வதற்கு மண்ணெண்ணெய் கூடக் கிடைக்காத நிலையில் தான் யாழ்ப்பாண மாணவர்கள் கல்வி கற்க வேண்டியிருந்தது. பாதுகாப்பற்ற, உயிருக்கு அஞ்சிய சூழ்நிலை அவர்களின் கல்வியைத் தறித்தது.

அடிக்கடி வந்த இடம்பெயர்வுகள், அகதி வாழ்க்கை, 1995 இன் ஒட்டு மொத்த இடம்பெயர்வு என்பன குடாநாட்டு மாணவரின் கல்வியை மேலும் பாழடித்தன.

இப்போதைய கீழ் மட்டத்தில் இருந்துகுடாநாட்டு மாணவரின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்குத் தீவிரமாக உழைக்க வேண்டியது யாழ்ப்பாண, திருகோணமலை, கொழும்பு கல்வி அதிகாரிகள், இப்பகுதி ஆசிரியர்கள்,அதிபர்களின்பொறுப்பான கடமையாகும்.

ஒருகால் ஓங்கி வளர்ந்திருந்த குடாநாட்டின் கல்வி விருட்சம் இப்போது ஒற்றைக் கொப்பு மரமாகி விட்டது. ஆசிரியர்கள், விஞ்ஞான கூடங்கள், நூல் நிலையங்கள், தளபாடங்கள், நூல்கள் போன்ற வளங்களே இந்த மரத்தை முந்திய விருட்சமாக வளர்த்தெடுக்கக் கூடிய நீராகும். கணனி மற்றும் நவீன தொழில்நுட்பங்கள், புறநிலைக் கல்வி, தொழில்சார் பயிற்சிகள் ஆகியன பசளைகளாக இடப்பட வேண்டும்.

அரசினரும், அதிகாரிகளும் இதில் பற்றுறுதியுடன் பணி செய்வார்களா? பேச்சும் அறிக்கையும் அல்ல; செயலே இருள் நீக்கி கல்வி ஒளியேற்றும்.

# புலிகள் மீதான அமெரிக்க தடை; தமிழ்க் கட்சிகள் மாறுபட்ட கருத்து

கொழும்பு, ஒக். 13

விடுதலைப் புலிகள் இயக்கத்தை அமெரிக்கா பயங்கரவாதிகள் அமைப்பாக அறிவித்து அதற்குத் தடைவிதித்திருப்பது தொடர்பாக தமிழ்க் கட்சிகள் கருத்து வெளியிட்டுள்ளன.

### கூட்டணி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்த கருத்து:

அமெரிக்கா புலிகள் இயக்கத்தை தடைசெய்தமை விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தப் போவதில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பை இந்தியா ஏற்கனவே தடை செய்திருந்தது. அதனால் அந்த அமைப்பு எந்த வித பாதிப்பையும் எதிர்நோக்கவில்லை.

அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், ஜி. எல். பீரிஸ் ஆகியோர் இந்தத் தடை விடுதலைப் புலிகளுடன் நடத்தும் பேச்சுக்களைப் பாதிக்காது என்று தெரிவித்துள்ளனர். புலிகளுடன் உடன் பேச்சு நடத்தி அரசியல் தீர்வுகாண முயல வேண்டும்.

### புளொட்

புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் கருத்து தெரிவித்ததாவது:-

அமெரிக்காவின் நடவடிக்கை சர்வதேச ரீதியில் புலிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். ஆனால் உள்நாட்டில் உடனடியாக புலிகளுக்கு பாதிப்பு ஏற்படாது. எனினும் நீண்டகால அடிப்படையில் பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பை உள் நாட்டில் தடை செய்யக் கூடாது. இனப்பிரச்சினைக்கு தீர்வு காண என்றோ ஒரு நாள் அவர்களுடன் பேசவேண்டி ஏற்படும். உள்நாட்டில் அந்த அமைப்பு தடை செய்யப்பட்டால் பேச்சுக்கான கதவுகள் மூடப்பட்டுவிடும் என்று தெரிவித்தார்.

### தமிழ்க்காங்கிரஸ்

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் தெரிவித்த கருத்து வருமாறு:-

அமெரிக்காவில் புலிகள் சட்டத்துக்கு முரணாக இயங்கவில்லை. சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்கா விடுதலைப் புலிகளை தீவிரவாதிகள் என்று கூறியிருந்தது. தற்பொழுது அந்த அமைப்பைத் தடை செய்துள்ளமை ஆச்சரியம் மட்டுமல்ல கவலைக்குரிய விடயமுமாகும் என்றார்.

### ரெலோ

ரெலோ அமைப்பின் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கம் கருத்து தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்டாலும் வேறு பல பெயர்களில் அவர்கள் இயங்க வாய்ப்பு உண்டு.

விடுதலைப் புலிகளை அமெரிக்கா தடை செய்வதைவிட இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இலங்கையை அமெரிக்கா நிர்ப்பந்தித்திருக்கலாம்.

தமிழ் மக்களுக்கு அமெரிக்கா உதவ விரும்பினால் யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை ஆகியவற்றுக்கு ஆலோசனை கூறலாம்—என்றார்.

### ஈ.பி.ஆர்.எல் எவ்.

ஈ.பி.ஆர்.எல். எவ். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:-

அமெரிக்காவின் தடை புலிகளுக்கு சர்வதேச ரீதியில் பின்னடைவை ஏற்படுத்தும். அவர்களின் பிழையான நடவடிக்கைகளே தடைக்குக் காரணமாக அமைந்தது.

இத்தடை மேற்கு நாடுகளில் புலிகள் ஆதரவு இழக்க வேண்டிய நிலையை உருவாக்கும். புலிகள் அரசாங்கத்துடன் பேச இது இறுதிச் சந்தர்ப்பமாகும். அதைப் பயன்படுத்த புலிகள் முன்வர வேண்டும் — என்றார்.

### ஈரோஸ்

ஈரோஸ் அமைப்புப் பிரமுகர் சுதாகரன் கருத்து வெளியிடுகையில், புலிகள் இன்றி எந்தத்தீர்வும் அமுல் செய்யமுடியாது. புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என்ற முடிவுக்கு எவராலும் வரமுடியாது. புலிகள் மீதான இந்த தடை இனப்பிரச்சினை தீர்வு முயற்சிக்குத் தடையாக உள்ளது.

புலிகளின் சகல நடவடிக்கைகளும் சரியெனக் கூறமுடியாது. அதில் பிழைகளும் உள்ளன. அதற்காக புலிகளை தடை செய்தது பொருத்தமல்ல—என்றார். (இ-21-3)

## யுனெஸ்கோ கழக ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஒக். 13

''யுனெஸ்கோ'' கழக ஒன்று கூடல் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது

வலயம்-1 இல் யுனெஸ்கோ கழகம் அமைக்கப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த கழகத் தலைவர்கள், செயலாளர்கள், பொறுப்பாசிரியர்கள் ஆகியோரை அதில் கலந்து கொள்ளுமாறு வலயம் - 1 கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ)

## 'படியாதவன்' காலமானார்

யாழ்ப்பாணம், ஒக். 13

பிரபல கல்விச் சேவையாளர் பி.கே.பாலசிங்கம் தனது 63 ஆவது வயதில் நேற்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

'படியாதவன்' என்ற பெயரில் 'உதயன்', 'சஞ்சீவி' உட்பட பல இதழ்களில் கல்வி தொடர்பான — பொருள் ஆழம்மிக்க — கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியவர் அவர்.

குடாநாட்டின் மிகச் சிறந்த விஞ்ஞான முதன்மை ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும் விளங்கிய பி. கே. பாலசிங்கம், ஆசிரியர்களுக்காக 650 இற்கும் மேற்பட்ட சேவைக்கால, சேவை முன்கால, வதிவிடப் பயிற்சிநெறிகளை நடத்தியவர்.

கல்வி அமைச்சினால் உயிரியல் பாடநூல் எழுத்தாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், இருதயநோய் காரணமாகத் தமது கல்விச் சேவையை நேரத்துடனேயே நிறுத்திக் கொண்டார்.

'பி. கே.' என குடாநாட்டின் கல்விச் சமூகத்தினரால் அழைக்கப்பட்ட அவர், மாணவர்களாலும், சக ஆசிரியர்களாலும், கல்வித்துறை நிர்வாகிகளினாலும் பெரிதும் மதிக்கப்பட்டவர். [உ]

## கிராம அலுவலர் இல்லை

நெடுந்தீவு, ஒக். 13

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட அனலைதீவு ஜே — 37, ஜே — 38 பிரிவுகளில் நிரந்தர கிராம அலுவலர்கள் கடமையில் இல்லை.

கரம்பன் நெலிஞ்சி முனை கிராம அலுவலர் சி. கணபதிப்பிள்ளை தனது பிரிவுடன் அனலைதீவின்இரு பிரிவுகளுக்கும் பதில் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-111)

# முதியோரைக் கனம் பண்ணும் மனப்பாங்கு எமக்கு வேண்டும்

## ஓய்வூதியர் சங்கக் கூட்டத்தில் உரை

நல்லூர், ஒக். 13

எமது சமூகத்தின் இன்றைய பின்னடைவுகளுக்கு முதியோர்களைக் கௌரவிக்கும் மனப்பாங்கு இல்லாமையே காரணம்.

வட பகுதி வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத் தலைவர் க. கணேசமூர்த்தி இவ்வாறு கூறினார்.

வட பகுதி வங்கி ஓய்வூதியர் நலன் புரிச் சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த ஞாயிறன்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அதில் சங்கத் தலைவர் கணேசமூர்த்தி மேலும் பேசும்போது கூறியதாவது:—

ஓய்வு பெற்ற ஊழியர்களைக் கௌரவிப்பது இரண்டொரு திணைக்களத்தில் மட்டுமே இடம் பெறுகிறது. முதல் தடவையாக வங்கியில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஊழியர்களை இன்று சேவையில் உள்ளவர்கள் கௌரவிக்கின்றனர். இந்நிலை சகல திணைக்களங்களிலும் ஏற்பட வேண்டும். இன்று ஓய்வு பெற்றவர்கள் கவனிப்பாரின்றிப் புறக்கணிக்கப்படுகின்றனர். ஓய்வு பெற்றவர்கள் எமது சமூகத்திற்காக தங்களை அர்ப்பணித்துப் பணியாற்றியவர்கள். கடந்த காலங்களில் அவர்கள் ஆற்றிய பணிகளே இன்றைய வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் காரணம். எமது சமூகத்தின் எதிர்காலம் மேம்பாடு பெற வேண்டுமெனில் இந்தப் பண்புகள் பேணப்படவேண்டும் என்றார்.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன.

★ சேவையில் இருப்பவர்களுக்கு சம்பள உயர்வு வழங்கும்போது ஓய்வு பெற்றவர்களுக்கும் அதே கணிசமான அளவு ஓய்வூதியம் உயர்த்தப்பட வேண்டும்,

★ வெற்றிடங்களை நிரப்பும் போது வங்கிகளில் பணியாற்றி ஓய்வூதியம் பெற்றவர்களின் தகைமையுள்ள பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கி அவர்களுக்கு நியமனம் வழங்கப்படவேண்டும்.

★ வருடாவருடம் முதியோர் வாரத்தின் போது வங்கியில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஊழியர்கள் கௌரவிக்கப்பட வேண்டும்.

முதல் இரு தீர்மானங்களும் கொழும்பில் உள்ள வங்கிகளின் தலைமையகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு அ. கோபாலகிருஷ்ணன் நன்றி தெரிவித்தார். (ஐ-103)

## நாளை

**புரட்டாதி 28**

செவ்வாய்க்கிழமை

திதி: திரயோதசி பிற்பகல் 2.29 வரை.

நட்சத்திரம்: பூரட்டாதி பிற்பகல் 3.17 வரை.

நடேசரபிஷேகம்

சுபநேரம்: 10.32-12.02

ராகுகாலம்: 3.02-4.32

[illegible]


## பொய்யாமொழி ஜோதிடம்

செவ்வாய்க்கிழமையும், சனிக்கிழமையும் காலை தொடக்கம் மாலை 5 மணி வரை நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலடியிலும், ஏனைய நாள்களில் காலை 10 மணிக்கு முன்பும், பிற்பகல் 2 மணிக்குப் பின்பும் மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம் (புதிய நேரம்).

சு. சிவஷண்முகானந்தக்குருக்கள்.

(50473)

## மாதாந்த பயிற்சிப் பரீட்சை

ஆண்டு 3 முதல் O/L வரை

(15 - 10 - 1997 புதன்)

விவரங்களுக்கு:

பதிவாளர்

BOND INSTITUTES

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | 28A, கூரேமாவத்த, கொழும்பு - 6.

(50472)

உ

ஈழத்து சித்தர் பரம்பரையின் குரு முதல்வர்

## திருப்பெரும் கடையிற் சுவாமிகளது 106 ஆவது குருபூசையும் அன்னதானமும்

14 - 10 - 97 நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு குருபூசையும் நண்பகல் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசையும் நடைபெறும். அடியார்கள் தவறாது கலந்து கொண்டு குருவருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

பரிபாலனசபை

கடையிற் சுவாமிகள் தேவஸ்தானம், நீராவியடி.

(50478)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேசம்

மலிவு விலையில்

## விற்பனையாகின்றன
## தீபாவளி வாழ்த்து மடல்கள்

எங்களிடம் இந்த ஆண்டுக்கான புதுவிதமான டிசைன்களில்

★ வர்ணப்படங்கள்
★ கட்டிங்காட் ★ போஸ்றகாட்

என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

சகல ஸ்ரேசனறி வகைகளும் கைவசம் உள்ளன.

வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் உண்டு.

தொடர்பு கொள்ளவும்:

**மகிமிலன் புத்தகசாலை**
3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி/1754)

## இதய அஞ்சலி

எமது மருத்துவ பீடத்தில் இணைந்து சேவை யாற்றுகின்ற சத்திர சிகிச்சை நிபுணர் தயாளன் அவர்களின் தந்தையார்

### அதிவண D J. அம்பலவாணர்

(முன்னாள் பேராயர்)

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த வேதனை அடைகிறோம். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மருத்துவ மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

[50482]

## மரண அறிவித்தல்கள்

### அருளம்பலம் சிவதாசன்

(ஓய்வு பெற்ற நில அளவையாளர்)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் வசித்து வந்தவருமாகிய அருளம்பலம் சிவதாசன் 07 - 10 - 97 செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி அருளம்பலம் அவர்களின் அன்பு மகனும், இணுவிலைச் சேர்ந்த உஷாதேவியின் அன்புக்கணவரும், முகுந்தன் (கனடா), கீதாஞ்சலி (ஆசிரியை, பண்டாரவளை), யமுனா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் தந்தையும், குகதாசன் (கொழும்பு), மணிதாசன், இந்துதாசன், ஈஸ்வரி (ஜேர்மனி), ஜெயதாசன் (ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான அருள்தாசன், இரதிவதனா ஆகியோரின் சகோதரரும், திரு. திருமதி சண்முகநாதனின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09 - 10 - 97 வியாழக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. ஜெயதாசன்.
அ. மணிதாசன்,
(சகோதரர்)

மனைவி,
C/2/3 Hospital Road,
Dehiwala. (50494)

### திருமதி பரமேஸ்வரி இராசேந்திரம்

(குரும்பசிட்டி)

குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும், 68, மருதடி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி இராசேந்திரம் 12-10-97 ஞாயிறு காலமானார்.

இவர் திருமதி ந. நாகேஸ்வரி, கலைஞானி செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான விக்கினேஸ்வரி, ஜெகதீஸ்வரி அவர்களினதும் கணேஸ்வரி, அகிலேஸ்வரி, சிறீஸ்கந்தகுமார் ஆகியோரினதும் அன்புத் தாயாரும், செ. கனகசுந்தரம், ஆ. வாமதேவம் (பொறியியலாளர்), க. சிவதாசன் (ஆசிரியர், யூனியன் கல்லூரி), அ. சக்திவேல் (மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர்), திருமதி சிவந்தி சிறீஸ்கந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வன் வா. ஞானபரன் (சவூதி அரேபியா), சி. தர்ஷன் (முகாமைத்துவ மாணவன், யாழ். பல்கலைக்கழகம்), சி. சேந்தன் (மாணவன், யூனியன் கல்லூரி), சி. விபூசணன், சி. வித்தகன், செல்விகள் வா. வாகினி, வா. வாசுகி, ச. வாரணி, ச. வைஸ்ணவி, சி. துஷாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12-10-97 அன்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. சக்திவேல்
(மருமகன்)

68, மருதடி றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம். (50476)

## மின்மாற்றி தகர்ப்பு

மட்டக்களப்பு கல்முனை வீதியில் நீலாவணையில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் மின்சார டிரான்ஸ்போமர் ஒன்று இனந்தெரியாதவர்களால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்காவின்...

(முதலாம் பக்கத் தொடர்)

போராடுவதில் முன்னணி வகிக்கிறது.

ஆனால் தமிழ் மக்களின் சட்டபூர்வமான உரிமைகளுக்காகப் போராடும் இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என்று அது அறிவித்திருக்கிறது. அமெரிக்க நடவடிக்கைநியாயமற்றதுபொருத்தமற்றது; பொறுப்பற்றது.

அமெரிக்கா எடுத்துள்ள முடிவு மனித உரிமை மீறல் விவகாரத்தில் பிரபல்யம் பெற்றுள்ள இலங்கையின் சிங்கள அரசாங்கத்தை ஊக்குவிப்பதாகவே அமையும். அது சமாதானத்துக்கு உதவப் போவதில்லை.

இனப்படுகொலை மூலம் தமிழ்த்தேசத்தை அழிக்கும் முயற்சிக்கே இது உதவும்.

சர்வதேச தமிழ் சமூகம் புலிகள் இயக்கம் மீது கொண்டுள்ள நன்மதிப்பை இந்த முடிவு கெடுக்கும் என்று அமெரிக்கா நினைப்பது தவறான கணிப்பாகும்.

உலக தமிழ் சமூகம் விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளது.

எனவே அமெரிக்காவின் முடிவு புலிகளுக்கு இருக்கும் ஆதரவை எந்த அளவுக்கும் குறைக்க உதவாது.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-21-3)

## பயணிகள்...

(முதலாம்பக்கத் தொடர்)

300 பயணிகள் செல்லக் கூடிய வசதிகள் கொண்ட ''தாலியா'' என்ற இக்கப்பல் இரு வாரங்களில் இலங்கைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலுக்கு தினமும் 5 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வாடகைக் கட்டணமாகச் செலுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

(இ-21-3)

## ஹிஸ்புல்லா...

(முதலாம் பக்கத் தொடர்)

வைத்தனர்.

3 கிலோ நிறையுடைய குண்டு நேரம் குறித்து வெடிக்கக்கூடியது என்றும்—

வைபவம் முடிந்து பிரதி அமைச்சர் திரும்பும் போது அவரைத் தாக்க இந்தக் குண்டு வைக்கப்பட்டிருக்கலாம்என்றும்- தெரிவிக்கப்படுகிறது,

பிரதி அமைச்சர் இந்த வைபவத்தில் கலந்து கொள்வதையொட்டி நேற்று முன்தினம்நண்பகல்அந்ததொழில் நுட்பக்கல்லூரி வளவு சோதனையிடப்பட்டதாகவும்—

பின்னர் பொலீஸ் பாதுகாப்பு அங்கு போடப்பட்டிருந்ததாகவும் -தெரிவிக்கப்பட்டது. (இ-21-3)

எமது புதிய வெளியீடுகள்!

ராதா ரவி...
**தலைவர் தங்கராசு**

ராம்கி – ரஞ்சிதா
**ஒரு தொட்டில் குழந்தை**

**வீடியோவிமல்**
யாழ்ப்பாணம்
(50477)

## வணிகப் போட்டி திகதிகள் மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ். கல்வி வலயம் ஒன்றின் வணிக வள நிலையத்தால் பாடசாலை மட்டத்தில் நடத்தப்படும் வணிகப்போட்டிகளில் ஆண்டு 9, 10, 11 ஆகிய பிரிவுகளுக்கான போட்டிகள் முன்னர் அறிவிக்கப்பட்ட திகதிகளில் நடைபெற மாட்டா என்றும்- அவை முறையே எதிர்வரும் 21 ஆம் 24 ஆம், 28 ஆம் திகதி களில் நடைபெறும் எனவும் வணிக வள நிலையப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## கனகராயன் குளத்தில் மோதல்

கொழும்பு, ஒக். 13

வவுனியா, கனகராயன் குளத்துக்கு வடக்கே பாதுகாப்பு முன்னணி நிலையிலுள்ள படையினர் மீது விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல்களை நடத்தினர்.

பாதுகாப்புப் படையினர் மோட்டார், மற்றும் பீரங்கிகளின் மூலம் புலிகளின் தாக்குதல்களை வெற்றிகரமாக முறியடித்தனர் என்று நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-5)

## வாக்கெடுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

காரப் பரவலாக்கல் அலகு குறித்து விரிவாக ஆராய்ந்தது.

அனேகமான அமைச்சர்கள் வடக்கு — கிழக்கு இணைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று வற்புறுத்தியதாகத் தெரிய வந்தது.

ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் ஒரு பொலிஸ் ஆணைக்குழு நியமிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. 5 பிரதிநிதிகள் கொண்ட ஆணைக்குழுவில் 3 பேரை ஆளுநர் நியமிப்பார். ஒருவரை முதலமைச்சர் நியமிப்பார்.

காணி விடயம் பிராந்திய சபையிடம் ஒப்படைக்கப்படும். தேசிய திட்டங்களுக்கு காணியை மத்திய அரசு பெற வழி ஏற்படுத்தப்படும். (இ-3-21)

## மரண அறிவித்தல்கள்

### முருகையா நவரத்தினம்

(லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபன முன்னாள் மேற்பார்வையாளர்)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா நவரத்தினம் 10 - 10 - 97 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரி (யாழ். பல்கலைக்கழகம்), ஞானேஸ்வரி (யாழ். விக்ரோறியா கல்லூரி மாணவி), முருகதாஸ் (விக்ரோறியா கல்லூரி மாணவன்), கௌரி (சைவப் பிரகாச வித்தியாலய மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நா. செல்லம், மூ. பாலசுப்பிரமணியம், செ. பாக்கியம், தி. சரஸ்வதி (முன்னாள் ஆசிரியை, தொல்புரம் அ. மி. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நா. திருநாவுக்கரசு (ப. நோ. கூ. ச. சங்கானை கிளை முகாமையாளர்), நா. கிருஸ்ணமூர்த்தி (கனடா), நா. சிவநாதன் (ஜேர்மனி), ஜெ. தவராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சி. ஜெயரட்ணத்தின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15 - 10 - 97 அன்று கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
நா. திருநாவுக்கரசு (துரை)
(மைத்துனர்)

சிவா வீதி,
மூளாய் மத்தி,
சுளிபுரம். (50468)

### செல்லையா பொன்னுத்துரை (பத்தர்)

இல; 05 (19) நாயன்மார் வீதியைச் சேர்ந்த செல்லையா — பொன்னுத்துரை (பத்தர்) 12-10-97 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-சின்னாச்சி தம்பதிகளின் புத்திரனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவரான சோமசேகரம் (தபால்தரம்பிரிப்பாளர்,) விஜயானந்தன், லோகேஸ்வரன், நேசமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மூத்ததம்பி என்றழைக்கப்படும் விஸ்வலிங்கம் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், முத்துக்குமாரு (யாழ். இந்துக் கல்லூர் - ஆசிரியர்), அசோகமாலா, ராசபரிமளம், நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-10-97 திங்கட்கிழமை இன்று முற்பகல் 10-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. பா. முத்துக்குமாரு
(மருமகன்)
(யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்)

இல: 05 (19)
நாயன்மார் வீதி, நல்லூர். (50496)

மேலும் மரண அறிவித்தல்
2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13 - 10 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org